கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உ௨.] ரக்தாக்ஷி௵ ஐப்பசி௴ [பகுதி க௨.
Vol. XXII. October-November-1924. No. 12.

சென்னை வித்யாஇலாகா மந்திரியும்,

சென்னைச் சருவகலாசங்கத்துப் புரோசான்ஸலருமான

கனம்பொருந்திய ஸ்ரீமான்

## ஸர். பர்சுராமதாஸ் பாத்ரோ அவர்கள்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 22, 23-ம் வருஷக்கூட்டத்து

வித்வந்மகாஸபையில் அக்கிராசனபீடத்திருந்து

## செய்த பிரசங்கம்*.

நான் முக்கியமாய் யோசிக்கும் விஷயம், எந்தவிதத்தில் இது போன்ற வித்வ சங்கங்களைச் சருவகலாசாலையோடு ஒத்துழைக்கச் செய்யலாமென்பதே. இந்தச் சங்கங்கள் சாஸ்திரமுறைப்படி ஆராய்ச்சி செய்கின்றனவாயிருக்க, சருவகலாசாலையோ தன் நோக்கத்திற்கமைந்த சில கிரமங்களைவிதித்து, வித்வஸபை (Academic Council) வித்யா ஸபை (Board of Studies) முதலிய சபைகளின் ஆலோசனைப்படி கேட்டு நடப்பதாக இருக்கிறது. சர்வகலாசாலைக்கும் இதுபோன்ற சங்கங்களுக்கும் நெருங்கியசம்பந்தம் ஏற்பட்டாலொழிய ஜனங்களுக்

* இது, ஆங்கிலத்திற்பேசிய பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பாக வெளியிடப் படுகிறது.

ருக் கிளர்ச்சிஉண்டாக்கக்கூடிய உயர்ந்தமுறையில் நம் தாய்ப்பாஷையை வளர்க்கமுடியாது. உதாரணமாக, ஆங்கிலநூலாசிரியராகிய இந்தியர் ஒருவர் மேற்றேசப் படிப்பாலுண்டான தம் அபிப்பிராயங்களைத் தேச பாஷையிற்சொல்ல முயலும்போது அவர் நவீனமுறைப்படி தம் எண் ணங்களைச் சொல்லக்கூடியவராயிருந்தும் பாஷையில் பரிசயம் இல்லாத தால், வித்வான்கள் அவர் சொல்லும் விஷயங்களின் ரஸத்தை அநுப விக்கக்கூடாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஒரு வித்வான் ஒரு சாஸ்திரவிஷயத்தைப்பற்றித் தன் ஞானமெல்லாம் தெரியும்படி தற்கால மேற்றேச சாஸ்திரபரிபாஷைகள் தெரியாவிட்டாலும் பிரசங்கிக்கக்கூடிய வராயிருந்தும், அவர்முறை கர்நாடகமுறையாயிருப்பதால் ருசிக்காத தாக இருக்கிறது.

ஆகவே, இந்த இரண்டுவிதமான குற்றங்களும் தீரக்கூடியதான ஐக்கியம் ஏற்படவேண்டும். சர்வகலாசாலையார் செய்யவேண்டியது என்ன? இதுபோன்ற சங்கங்களின் வித்வான்களையும் தங்கள் ஆலோ சனைக்குச் சேர்த்துக்கொண்டு, அவர்கள்மூலம் ஜனங்கள் எளிதில் அறி யும்படியான சொல், பொருள் செறிவுள்ள உயர்ந்தநடைப்போக்கை உண் டாக்க வழிசெய்யவேண்டுமென்பதே. அவ்விதம் ஊக்கம் கொடுப்பதால் மேற்றேசபாஷையிலுள்ள சாஸ்திரசம்பந்தமான உயர்ந்த நூல்கள் மிகச் சிறந்தநடையில் வெளிவருவனவாகும்.

மற்றொரு முக்கியமான விஷயம், ஒவ்வொருபாஷைக்கும் சர்வகலா சாலையார் வித்யாபீடம் ஸ்தாபனஞ்செய்யவேண்டுமென்பது. அது தற் கால புது எண்ணங்களை (தேசத்தில் விதைக்க) இலக்கியத்திற் புது முறைகளை ஆராய்ச்சிசெய்ய ஏற்படவேண்டும். உதாரணமாகப் பௌத் தர்களும் ஜைனர்களும் ஜனங்களுக்குத் தங்கள் புதுமதக்கொள்கைகளை எப்படி அறிவுறுத்தினார்கள். தமிழ்ப்பாஷையை நன்கு ஆராய்ந்து, அழகானமுறைகளில் தம் புதுக்கொள்கைகள் ஸம்ஸ்கிருதம்போன்ற இதரபாஷைகளில் இருந்தவற்றைத் தமிழுக்கே உரியதாகச் செய்துவிட் டார்கள். இது, சுலபமான மார்க்கமல்ல. ஆனால், இதுதான் உயர்ந்தமார்க்கம். இவ்விதமே தமிழ்ப்பாஷை முன்னேற்றம் அடைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். என் நண் பரும், தமிழ்ப்பாஷை வளர்ச்சியில் அதிக ஊக்கமுள்ளவருமான

மகா-ா-ா-ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்மூலம் நான், இந்த முறையையே கிறிஸ்தவர்களும் மஹம்மதியர்களும் கையாண்டிருப்ப தாக அறிகிறேன். உதாரணமாக, வீரமாமுனிவர் என்பவர், (பதி னேழா நூற்றுண்டினர்) தம் புதுமதக்கொள்கைகளை உயர்ந்தவகுப்பா ரும் அறிந்துகொள்ளவேண்டித் தமிழ்ப்பாஷையை நன்குகற்று அதன் அழகுகள் பலவற்றையும் சந்தங்களையும் அணிகளையும் அமைத்து நூ லியற்றியிருப்பதாகத் தெரிகிறது. அவ்விதமே மஹம்மதியர்களும், தமிழ்ப்பாஷையில் தங்கள் மதநூல்கள் என்று போற்றும்படியான அருமையான நூல்கள் செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே, (இலக்கியம், சாஸ்திரம், தத்துவம் முதலியன சம்பந்தமான) மேற்றேசக்கல்வியை நாம் ஜனங்களுக்கு அறிவுறுத்தவேண்டுமானல், தேசபாஷையின் இலக்கியஞானம் அவசியமாகையால், தேசபாஷையைக் கட்டாயம் படிக்கச்செய்யவேண்டியது முக்கியமாகிறது. இது விஷய மாக நாம் தேசபாஷையிற் பாண்டித்தியமடையும் கலாசாலை ஆங்கில உபாத்தியாயர்களைச் சரியானபடி ஆதரிக்கவேண்டும். வித்யார்த்திகளைத் தவிர வித்வான்களும் அவர்களுடன் சல்லாபம் செய்வதால் புது உணர்ச்சியுடையவர்களாய் ஏற்படுவதால் அவர்கள்மூலம் சிறந்த நூல்கள் எழுதப்படுவனவாகின்றன. இதுபோன்ற வழிகளில்தான் வித்வான் களின் முதிர்ந்த ஞானத்தையும் அனுபவத்தையும் சர்வகலாசாலையார் உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய மார்க்கத்தைத் தேடவேண்டும்.

தேசபாஷைசம்பந்தமாக அதிகக்கவனம் செலுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது. அதுவிஷயமாக இந்த மாகாணத்திலுள்ளபாஷைகள் செய்யவேண்டியதொன்றிருக்கிறது. அதாவது: இந்தப்பாஷைகளின் வித்வான்கள் ஒன்றுசேர்ந்து, மேற்றேசசாஸ்திரங்கள் தேசபாஷையில் எழுதப்படுவதற்கு ஒரேமாதிரியான பரிபாஷைத்தொடர் ஸம்ஸ்கிருதத்தி லிருந்து ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு பாஷையின்விஷயம் மற்றொருபாஷையில் எழுதப்பட ஒரே பரிபாஷைத்தொடர் மிகவும் வசதியுள்ளதாக இருக்கிறது.

இத் சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய மற்றொருவிஷயமும் உண்டு. அதாவது ஒரு பாஷையில் உள்ள விஷயம் மற்றொருபாஷையில் நயம் குறையாது மொழிபெயர்க்கக்கூடியமாதிரி எழுதப்படவேண்டுமென்பதே.

தமிழில் ஒருநூல் இருப்பதில் அதை மற்றொருபாஷையில் மொழி பெயர்ப்பது அசாத்தியமாக இருக்கக்கூடாது. ஐரோப்பிய பாஷை களைப்போலல்லாமல் நம்மாகாணத்தில்நான்குபாஷைகளே இருக்கின்றன. ஆகவே இந்தப் பாஷைகளுக்குள் ஒற்றுமை உண்டாக்குவது கஷ்ட மல்ல. இந்தத் தமிழ்ச்சங்கம் சென்ற இருபத்துமூன்றுவருஷகாலம் நடத்திவந்திருக்கும் ஆராய்ச்சிமுறையில் முயன்றால் நம் தேசபாஷை களிற் சரியான பரிபாஷைத்தொடர் ஏற்படுத்தமுடியாது என்ற கவலை நீங்கி, இலக்கியம் சாஸ்திரம் சிற்பம் தத்துவம் முதலிய விஷயங்களின் பரிபாஷைக்கெல்லாம் தகுந்த தொடர்கள் ஏற்பட்டுவிடு மென்பதிற் சந்தேகமில்லை.

பழையகாலத்தில் வித்வான்களை ஆதரித்துப் பாஷையை வளர்த்து வந்தவர்கள் வையம் தாங்கும் மன்னரும் பிரபுக்களும் ஆவர். அவ்வாறு ஆதரிப்பவர்களைத் தற்காலம் காண்பது அரிது. ஆனால் நம் சேது நாட்டரசராகிய மாட்சிமைதங்கிய இராஜராஜேஸ்வரசேதுபதியவர்களோ தாய்ப்பாஷையின் முன்னேற்றத்தில் இயற்கையான உற்சாகமுடைய வராயிருப்பதுடன், தாமும் தமிழில் அதிக பாண்டித்தியமுடையவராய் வித்வான்களின் ஞானத்தைச் சரியானபடி அளக்கக்கூடியவராகவும் இருக்கிறார்.

நமக்குள், ஆங்கிலம்கற்றவகுப்பரிற் பெரும்பாலார் தங்கள் அலுவல்களிலும் தொழில்களிலும் அதிக கவனத்தைச் செலுத்தி வருகிறார்களேயொழிய நம் தேசமுன்னேற்றத்திற்கு அவசியமான அம் சங்களான தேசபாஷையின் விருத்தியைப்பற்றியும், அதனால் ஜனங் களுக்கேற்படும் புது உணர்ச்சியைப்பற்றியும் நன்குதெரிந்துகொள்ளாத வர்களாயிருக்கிறார்கள். ஆனால், தேசபாஷையில் நடக்காத நம் மாகாணத்துக் கல்வி சரியான நிலையில் நடக்கிறதென்று திருப்திப்படு கிறோமோ! கலாசாலைகள் சரியானபடி தங்கள் கடமைகளைச் செய் கின்றனவென்று திருப்திப்படுகிறோமோ! இல்லை. இப்படியிருக்கும் காலத்

தில் இந்தச்சங்கமானது பிரான்ஸ் ஜெர்மனி தேசத்துச்சங்கங்களைப் போல் பாஷையைப் பாதுகாப்பதுடன், அதை வளர்த்து வித்யார்த்திகளை வித்வான்களாக்கி அவர்கள்மூலம் தேசபாஷையை எங்கும் கற்பிக்கும்படிசெய்வதை நோக்க எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

நீங்கள் என்னைத் தெலுங்கர்களின் சங்கத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்றுகேட்பது சகஜமே. ஆனால், அதுவிஷயமாக என் அபிப்பிராயங்களைப் பின் ஒரு சமயம் பேசவேண்டுமென்று நினைப்பதால், நான் தங்கள் இஷ்டப்படி நடக்காததற்குத் தங்கள் மன்னிப்பைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, நான் தங்களுக்கு முக்கியமாக வற்புறுத்தவிரும்புவது இவைதான். நம் தேசபாஷைகளைக் கட்டாயம் கலாசாலைகளிற் படிக்கச் செய்யவேண்டுமானால், அதன்மூலம் தற்கால மேற்றேசக் கல்வியைப் புகட்டவேண்டுமானால், நம் தேசபாஷையை விருத்திசெய்ய இதுபோன்ற சங்கங்கள் சர்வகலாசாலையாருடனும் காலேஜ்களுடனும் ஒத்துழைக்கவேண்டும். இந்த மாகாணத்திலுள்ள இதரபாஷாவித்வான்களும் தமிழ்வித்வான்களும் ஒன்றுசேர்ந்து, இந்தப்பாஷைகளுக்குள் ஒற்றுமையான பரிபாஷைமுதலியவற்றை ஏற்படுத்தவேண்டும். இந்த அம்சங்கள் நன்கு அறிந்துகொள்ளப்பட்டாலொழியத் தற்காலப் படிப்பைத் தேசபாஷையிற் புகட்டவேண்டுமென்பது அசாத்தியமான காரியமாகும். வேறு எந்தவிதத்திலும் இந்தச்சங்கம் வித்யா இலாகாவுடன் ஒத்துழைக்கக்கூடுமானாலும் அந்தவிதமாக இந்தச்சங்கம் செய்யும் உதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். இந்தச் சங்கத்தின் சிறந்தநோக்கங்கள் ஈடேற எந்தவித ஒழுங்கு ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமோ அந்த ஒழுங்கை நமக்குள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

---

# செய்யுட்பொருத்த இலக்கணம்.

(உசஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### வருணப்பொருத்தம்.

8. வருணப் பொருத்தமே வருமுயி ரடங்கலுங்
கம்முத லாறுங் கைசிகர்க் காகுந்
தம்முத லாறுந் தருமன் னவர்க்கே
லவறன வணிகர்க் காம்ழளச் சூத்திரர்க்
கிம்முறை நஞ்செழுத் தியலினு மிழுக்கா.

எ-து, வருணப்பொருத்தமாமா றுணர்த்துகிறது. பன்னீருயிரும், க், ங், ச், ஞ், ட், ண் என்னும் ஆறொற்றும் அந்தணர்க்கெனவும், த், ந், ப், ம், ய், ர் என்னும் ஆறொற்றும் அரசர்க்கெனவும், ல், வ், ற், ன் என்னும் நான்கொற்றும் வணிகர்க்கெனவும், ழ், ள் என்னும் இரண்டொற்றும் சூத்திரர்க்கெனவும் உரைத்தனர் புலவர்; இந்த முறையினொடு நஞ்சென விலக்கப்பட்டஎழுத்துக்கள் வரினும் வழுவன்றெனக் கொள்க.

மேற்கோள் :—

தீதிலுயி ரீராறு முதலொற் றாறுந்
திருமறையோர்க் கடைவேயோ ராறும் வேந்தர்க்
கேதிலவ றனக்கள்வணி கர்க்கு மற்றை
யெழுத்துளவை சூத்திரர்க்கா மியன்ற சாதி
யோதிமன்றன் படைப்புயிரே யரன்மால் செவ்வே
ளும்பர்கோன் பரிதிமதி மறலி நீர்க்கோன்
காதிலள கேசனிவ ரிவ்வி ரண்டாக்
கம்முதன்மூ வாறொற்றுங் கருதிச் செய்தார்.

என்பது பாட்டியல்.

## நாட்பொருத்தம்.

9. நாளின் பொருத்த நவிலுங் காலை
நான்கு மைந்து மூன்றுமாய்ப் பிரியுயிர்
கார்த்திகை பூராட மூத்திரா டம்மே
கவ்வரி நான்கிரண் டிருமுறை மூன்றிவை
யோண மாதிரை யுரை யிரு பூசம்
சவ்வரி நான்குமைந் துங்கடை மூன்றுமாம்
அவ்வவை யிரேவதி யசுவதி பரணி
ஞவ்வரி ஞ ஞாஞெ ஞொவ்வா மவிட்டம்
தவ்வரி யிரண்டே ழொடுகடை மூன்றும்
சோதி விசாகந் தூயநற் சதயம்
நவ்வரி யாறு நண்ணிரு மூன்றும்
பொற்பனை கேட்டை பூராட் டாதி
பவ்வரி நான்கும் பகரிரண் டாறும்
உத்திர மத்த மொளிர்சித் திரையே
மவ்வரி யாறு மற்றிரு மூன்று
மகமா யிலிய மகந்தொடர் பூரம்
யயாஉத் திரட்டா தியூயோ மூலம்
வவ்வரி நந்நான் குரோகணி யிந்திரன்
அவ்வவ் வெழுத்திற் கவ்வயவை குறித்தபி
ஞண்மூ வொன்பதா நாயக னியற்பெயர்
நாண்முதன் மங்கல நவில்சொல் வீரு
வெண்ணி யிரண்டுநான் காறெட் டொன்பதா
மன்றி யொன்று மூன் றைந்தே ழாகா.

எ-து, நாட்பொருத்த மாமா றுணர்த்துகிறது. மொழிமுதற் கண்வரு மெழுத்திற்கு அச்சுவினிமுத லிருபத்தேழுநக்ஷத்திரங்களைப் பகுத்தார் புலவர். அவற்றுள்,—

அ, ஆ, இ, ஈ—கார்த்திகையன. உ, ஊ, எ, ஏ, ஐ—பூராடத்தன. ஒ, ஓ, ஔ—உத்திராடத்தன. க, கா, கி, கீ—திருவோணத்தன. கு, கூ—திருவாதிரையன. கெ, கே, கை—புனர்பூசத்தன. கொ, கோ, கௌ—பூசத்தன. ச, சா, சி, சீ—இரேவதியன. சு, சூ, செ, சே, சை—அச்சுவினியன. சொ, சோ, சௌ—பரணியன. ஞ, ஞா, ஞெ, ஞொ—அவிட்டத்தன. த, தா—சோதியன. தி, தீ, து, தூ, தெ, தே, தை—விசாகத்தன. தொ, தோ, தௌ—

சதயத்தன். ந, நா, நி, நீ, நு, நூ—அனுஷத்தன. நெ, நே, நை—கேட்டையன. நொ, நோ, நௌ—பூரட்டாதியன. ப, பா, பி, பீ—உத்திரத்தன. பு, பூ—அத்தத்தன. பெ, பே, பை, பொ, போ, பௌ—சித்திரையன. ம, மா, மி, மீ, மு, மூ—மகத்தன. மெ, மே, மை—ஆயிலியத்தன. மொ, மோ, மௌ பூரத்தன. ய, யா—உத்திரட்டாதியன. யு, யோ—மூலத்தன. வ, வா, வி, வீ—உரோகணியன. வெ, வே, வை, வௌ—மிருகசீரிடத்தன.

இங்ஙனம் பகுத்தவற்றைக் கொள்ளுமாறு:—பாட்டுநாயக னியற்பெயராதி யெழுத்தினுளே முதற்கொண்டு ஒன்பதொன்பதாக வெடுத்த மங்கலச்சொன்முதலெழுத்துநாளளவு மெண்ணி இரண்டு நான்கு மாறு மெட்டு மொன்பதுங் கண்டா னல்லனவெனவும், ஒன்று மூன்று மைந்து மேழுங் கண்டாற் றீயன வெனவுங் கூறினர் புலவர்.

மேற்கோள் :—

கருது முயிரடைவே நான்கைந்து மூன்று
கார்த்திகையே பூராட முத்தி ராட
மூராறு கவ்வரிசி னுன்கிரண்டு மூன்று
மூன்றோண மாதிரையே புணர்தம் பூசம்
இருமைகொள் சவ்வரிசி னுன்கைந்து மூன்றி
ரேவதிவாம் பரிபரணி ஞகர நான்கும்
வருமவிட்டந் தகரமிரண் டேழு மூன்றும்
வளர்சோதி விசாகமே சதய மன்னும்,

சதிர்திகழ்நவ் வினிலாறு மூன்று மூன்றந்
தருமநுடங் கேட்டையே பூரட் டாதி
திதமிகு பவ்வரிசி னுன்கிரண்டோ டாறுத்
திரமுதன்மூன் றுமவ்வி லாறு மூன்று
மிதமூடன்மூன் றும்மகமா யிலியம் பூர
மியயாவுத் திரட்டாதி யூயோ மூலம்
உதவியவம் முதனான்கு மொழிந்த நான்கு
முரோகணியா மிருகசீ ரிடமாம் பேர்நாள்.

என்பன பாட்டியல்.

## கதிப்பொருத்தம்.

10. கதியின் பொருத்த விதியைக் கூறி
லொவ்வொழி குறிலே றவ்வொழி வலியே
செவ்வி தாகுந் தேவர் கதியே
னவ்வொழி மெலியே நெடின்முத னன்கும்
வவ்வில தாகு மக்கட் கதியே
ஓஔய ரலழற விலங்கின் கதியே
னவளஐ ஔவு நாகர் கதியே.

எ-து, கதிப்பொருத்தமாமாறுணர்த்துகின்றது. அ, இ, உ, எ, க, ச, ட, த, ப என்னும் ஒன்பதெழுத்தும் தேவர்கதியெனவும், ஆ, ஈ, ஊ, ஏ, ங, ஞ, ண, ந, ம என்னு மொன்பதெழுத்தும் மக்கட்கதியெனவும், ஒ, ஓ, ய, ர, ல, ழ, ற என எழும் விலங்கின்கதியெனவும், ஐ, ஔ, வ, ள, ன என்னு மைந்தும் நரகர்கதியெனவும் வழங்கும். இவற்றுட் டேவர்கதியும் மக்கட்கதியும் நல்லனவெனவும், மற்ற இருகதியும் தீயன வெனவும் கொள்க.

மேற்கோள் :—

வேண்டுங் குறில்வன்மை யீரேழித்தால் விண்ணோர்க்காம்
ஆண்டு நெடின்முதனன் கந்தமொழித்—தீண்டிய
மென்மையா மக்கட் கிவையிரண்டு மெய்க்கதிக்கு
நன்மையா முன்மொழிக்கு நாட்டு.

நாட்டிய ஒ ஓ யரலள நல்வன்மைக்
கீட்டிய வந்த மிவைவிலங்காங்—காட்டா
தொழித்த நரகர்க்கென் றேதினு ரின்ன
வெழுத்தாகா வாதி யிடத்து.

என்பன பாட்டியல்,

## கணப்பொருத்தம்.

11. கணவியல் பொருத்தமே கணமெனுஞ் சீரினுண்
முந்நே ரிந்திரன் முந்நிரை நிலனே
நிரைநேர் நேர்மதி நேர்நிரை நிரைநீ
ரிந்நாற் கணமுநன் றுமியை முதற்சீர்
இருவிளங் காய்முறை யந்தரஞ் சூரிய
னிருமாங் கனிமுறை வாயு தீயிவை
வருமுதற் சீர்க்கு வழுக்கண மென்ப,

எ-து, கணப்பொருத்தமாமா றுணர்த்துகிறது. வடமொழியாற் கணமெனினும் தென்மொழியாற் சீரெனினும் ஒக்கும். இவற்றுள், முதற்கண்வருஞ்சீர் தேமாங்காயாயின் இந்திரகண மெனவும், கருவிளங் கனியாயின் நிலக்கணமெனவும், புளிமாங்காயாயிற் சந்திரகணமெனவும், கூவிளங்கனியாயின் நீர்க்கணமெனவும் வழங்குவர். இந்நாற்கணமும் நல்லனவென்ப.

அன்றியும் முதற்கண் வருஞ்சீர் கருவிளங்காயாயின் அந்தரகண மெனவும், கூவிளங்காயாயிற் சூரியகணமெனவும், தேமாங்கனியாயின் வாயுகணமெனவும், புளிமாங்கனியாயின் தீக்கணமெனவும் வழங்கப்படும். இவை முதற்சீராக வரிற் றீதென்பர். என்னை?

"அந்தர கணமே வாணு ளகற்றும்
சூரிய கணமே வீரியம் போக்கும்
வாயு கணமே செல்வ மழிக்கும்
தீயின் கணமே நோயை விளைக்கும்"

என்று ராகலின். ஆயினும் இவற்றை இருள்வழி மதமென விதித்தார் வேதவழி தெளியாதாரெனக் கண்டுணர்க. அன்றியும் இலக்கண முறையே வடமொழிநூலில் வழங்குநடையாமொழியத் தென்மொழி நூலார் முதற்சீரா வியற்சீர் மிகவே வழங்குவாரெனவும் கொள்க.

செய்யுட்பொருத்த இலக்கணம்

முற்றிற்று.

ந. பத்மாசனி அம்மாள்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௪௪௧-ம்பக்கத் தொடர்ச்சி.)

209. சிலையொடு கயல்வாட் டிங்கள் ஏந்தி ஓர் செம்பொற் கொம்பர்
முலைஇடைமுகிழ்ப்பத்தேர்மேல் முன் திசைமுளைத்ததன்னாள்,
அலைகடற் பிறந்து, பின்னை அவனியில் தோன்றி, மீள
மலையிடை உதிக்கின்றாள்போல், மண்டப மதனில் வந்தாள்.

இ-ள். (இராமர் ஆதனத்தில் அமர்ந்த தற்சமயத்தில்,) வில்லோடு (இரண்டு) மீன்களையும் சந்திரனையும் தாங்கி, (ஒளிமிக்க) ஒரு செம்பொற் கொம்பு (ஆகிய சோதி), முல்லை யரும்புகள் தன்னிடத்தில் அரும்பாநிற்கத் தேரின்மீது கீழ்த்திசையில் முளைத்ததை ஒத்தாள் (ஆன சீதா தேவி,) கடலிலே (முதலில்) பிறந்து, பின்பு பூமியிலே தோன்றி, மீண்டும் மலையிலே உதிக்கின்றாள் போல, (க் கல்யாண,மண்டபத்திலே வந்தாள்.

சிலை - வில் (நெற்றி). கயல் - மீன் (கண்). வாள் திங்கள் - ஒளியை யுடைய சந்திரன் (முகம்). முலை - முல்லை - முல்லை அரும்பு (பல்). செய்யுளாதலால் 'முல்லை' முலையென நின்றது. முகிழ்த்தல் - அரும்பல். முன்திசை - பூர்வதிசை - கிழக்கு. அலைகடல் - (அலைகளோடுகூடி) அலைகின்ற கடல். அவனி - பூமி.

'முலை' என்பதற்கு முந்திய உரைகாரர்கள் 'கொங்கை' யென்று பொருள் கூறிப் போயினர்கள். நெற்றி முதலிய பிற உறுப்புக்களை அவற்றின் உவமானப் பொருள்களாற் கூறிய கவி இவ் ஓர் உறுப்பை மட்டும் அவ்வாறு கூறாதபோனானெனக் கொள்வது தகுதியாகத் தோன்றவில்லை.

'முல்லை முகிழ்ப்ப' என்றது புன்னகை அரும்புதலாற் பல்வரிசை சிறிது வெளிப்பட்டு இனிது விளங்க' என்பதைக் குறித்தது. இயல்பாக இனிதாக உள்ள முகப் பொலிவு குறுஞ் சிரிப்பால் அதிக இனிமையுடையதா மென்பது கூறவேண்டுவதில்லை.

இர்ாமர் ஆதனத்தில் அமர்ந்த தற்சமயத்தில் சீதாதேவி வந்தா ரென்று நாடக நிகழ்ச்சி போலக் கூறிய நயம் கவனிக்கத்தக்கது.

'தேர்மேல் முன்திசை முளைத்த தன்னுள்' என்றதனால், தேரிலே கிழ்த்திசையிலே சூரிய சோதி உதயமாதல்போற் (சீதாதேவியாகிய) பெண்சோதி தோன்றிய தாகவும், கல்யாண மண்டபத்தின் கிழக்கு வாயிலை நோக்கிச் சீதாதேவி கிழக்கினின்றும் தேரிலே வந்தாராகவும் கம்பர் குறிப்பித்தா ரென்று கொள்ளலாம். அவ்வாறு வருவதைப் பார்க்கும் நிலையில் இராமர் கிழக்கு முகமாக வீற்றிருந்தாரென்று பாவித்தல், அவர் ஆதனத்தில் அமர்தலும் சீதாதேவி வந்தாரென்றதனால், பொருத்தமாம்.

பெண்களைக் கொம்புக்கு உவமிப்பது கவிமரபு. அவ்வுவமையை அதிகப் பொருத்தமானதாக்கச் செம் பொற்கொம்பு என்று கூறிப் பெண்ணாகிய உவமேயத்தில் உள்ள சில சிறந்த உறுப்புக்களின் உவமானப் பொருள்களை அந்தக் கொம்பாகிய உவமானத்தோடு அழகாகப் பொருத்தி ஓர் இனிய மனக் காட்சி தோன்றக் கூறிய நயம் பாராட்டற் பாலது. அதனோடு நில்லாமல், உயிருள்ள மரத்தில் முளைக்கும் கொம்பு உயிரில்லா மரத்தாலாகிய தேரில் முளைத்ததாக வியப்பும் நயப்பும் உதிக்க உரைத்த விநோதம் மெச்சத்தக்கது. அம்மட்டில் அமையாமல், உள்ளுறையாக, ஒளிமிக்க அக்கொம்பு ஒரு சோதியாகவும், அச்சோதி, கீழ்த் திசையிலே தேரிலே உதிக்கும் பால சூரிய சோதி போலத் தேரிலே கிழக்குத் திக்கிலே தோன்றியதாகவும் கூறிய சாதுரியம் ஊன்றி உணர்ந்து உவத்தற் குரியது. கொம்புக்கும் சோதிக்கும் பொதுவாகப் பொருந்தும்படி, 'அங்குரித்தல்' 'உதித்தல்' என்ற இரு பொருள் உள்ள 'முளைத்தல்' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருத்தலை நோக்குக.

சூரிய சோதி, முதலிற் கடலில் உதித்துப் பின்பு அக் கடலுக்கு அடுத்த பூமிக்கு மேல் விளங்கி, அதன்பின் அப்பால் உள்ள மலைமேற் பிரகாசித்தல்போலச் சீதா சோதியும் முதலிற கடலிலும் பின்பு பூமியிலும் அதன்பின் மலையிலும் தோன்றியதாகக் கூறிய கவிநுட்பம் ஆச்சரியமும் ஆனந்தமும் அளிப்பது.

முன்னிரண்டடியிற் குறிப்பாக அமைத்த 'சோதி' என்ற பொருளை விடாது பின்னிரண்டடியிலும் குறிப்பாகப் பொருந்தச் செய்த கவி வன்மை, கண்டு களிக்கத்தக்கது.

இவ்வாறாக, இன்பமயமான இந்தப் பாட்டு ஓர் ஆனந்த சாகரம் போலவும், இப்பாட்டை ஆராயுந்தோறும் புதியன புதியனவாக மேலு மேலும் புலப்படும் கருத்துக்கினிய கருத்துக்கள், நோக்க நோக்க, அச் சாகரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக முடிவின்றித் தோன்றுகின்ற கண்ணுக் கினிய அலைகள் போலவும் இருக்கின்றன.

[இலக்குமிதேவியாகச் சீதாதேவி, முன் பாற்கடலிற் றோன்றிய காலத்தில், அவரைத் திருமாலாக இருந்த இராமர் விவாகம் செய்த அன்றைத் திருக்கலியாணத்திலும் இன்றைத் திருக்கலியாணம் அதிக அழகுடையதென்று இரு திருமணங்களையும் காணப்பெற்ற இமையவர் கள் கூறினார்கள்.

தேவலோகம் பூலோகம் நாகலோகமென்ற மூன்று லோகங்களி லும் உள்ள அழகுவாய்ந்த பொருள்கள் யாவற்றின் அழகுகளும், எந்த இலக்குமிதேவியின் அமிசங்களோ, அந்த இலக்குமிதேவியே ஆன. சீதாதேவியின் திருக்கலியாணத்தின் அழகைச் செப்ப முடியுமோ!

அப்படிப்பட்ட அழகைக் கண்டு களிக்கப் பிரமதேவர் முதலியோர், தேவியருடன் வந்தார்கள். விவாக வேள்வி செய்தற்கு மறையவர் சூழ, வசிட்டர் வந்து மங்கல அங்கியை வளர்த்தார். (அங்கி - தீ.)

இராமரும், சீதாதேவியும் மணவறையை அடைந்து மண வேதி கையில் இருந்தார்கள். சனகர், இராமரெதிர் நின்று "நீரும் என்மகளும் திருமாலும் திருமகளும்போல நீடு வாழ்வீராக!" என்று இராமர் கையில் தாரைவார்த்தார்.

அப்போது, அந்தணர் ஆசீர்வாத ஓசையும் மாதர் பல்லாண்டிசை யும் தேவர் வாழ்த்தொலியும் சங்கநாதமும் முழங்கின: வானவர் மலர் மழை வருஷித்தார்கள்; புரவலர் பொன்மழை பொழிந்தார்கள்; மற்ற வர்கள் மலர்கள் முத்துக்கள் முதலியவற்றை வாரிச் சொரிந்தார்கள்.

இராமர், மங்கல வேள்வித்தீயில் மந்திரம் ஓதி ஆகுதி பெய்து, சீதாதேவி கையைப் பிடித்துக் கொண்டு, அந்த மங்கலத்தீயை வலம் வந்தார்: அப்போது இராமரோடு சென்ற சீதாதேவி, பிறப்புத்தோறும் உயிர் பற்றப்பெற்ற உடம்பொத்தார்.

மங்கலத்தீயை வலம் வந்தவர்கள் அதனை வணங்கியபின், அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் கிரியை நிகழ்த்தப்பெற்றது. பின்பு தம்பதிகள் முனிவரையும் தசரதரையும் வணங்கி, அரண்மனைக்குச் சென்று, தாயர் மூவரையும் பணிந்தார்கள்.

சனகர், தமது தம்பி குசத்துவசாது குமாரிகள் மூவரையும் இராமருக் கிளையார் மூவருக்கும் கொடுக்க, வசிட்டர், இராமருக்குச் செய்ததுபோல, மணவேள்வி செய்து, அம் மூன்று தம்பதிகளுக்கும் மணவினை முடிப்பித்தார்.

மூன்று விவாகங்களும் முற்றுப்பெற்றபோது, சனகர், தாம் கொடுக்கவும் பிறர் பெறவும் முடியாத தமது புகழ் நீங்கலாக, வேண்டியவர்கள் வேண்டியவைகளை வேண்டிய அளவாகப் பெற்றுக்கொள்ளும்படி, தம்மிடத்துள்ள பொருள்களெல்லாவற்றையும் கொடுத்தார். தசரதரும் அவ்வாறு கொடுத்து மகிழ்ந்து மிதிலாநகரத்திலே சில நாள் இனிது தங்கி யிருந்தார்.]

---

## பரசுராமப்படலம்.

பரசுராமரை இராமர் வென்றதைக் கூறுவது.

[மிதிலையிலே, இராமரும் சீதாதேவியும் நானுவித போகங்களையும் அனுபவித்து இன்புற்று வாழும் நாளிலே, விசுவாமித்திரர், அவர்களை ஆசீர்வதித்து, விடைபெற்று, வடதிசை நோக்கிச் சென்று இமயமலையை அடைந்தார்.

அவர் போனபின், தசரதர், மிதிலாநகரமாந்தர் பிரிவென்னும் துன்பக்கடலில் முழுகத் தம் மக்கள் மருமக்கள் முதலியோருடன் அயோத்திக்குப் புறப்பட்டார்.

தசரதர் முன்னே படர, மிதிலைவாசிகள் மனம் பின்னே தொடரத் தம்பியர் அருகேவர, இராமர் சீதாதேவியுடன் இனிதாக வழிச்சென்றார். செல்லும்போது, சில சகுனங்கள் எதிர்ப்பட, "அவற்றின் பலன் நன்றோ? தீதோ? எனத் தசரதர் வினவ, நிமித்திகன் "தீது நேரும், நன்றாய் முடியும்" என்றான். (படர-செல்ல நிமித்திகன்—சகுனபலம் சொல்வோன்.)

அப்போது, தமது தாய் தந்தையர்க்குக் கேடுசெய்த கார்த்த வீரியார்ச்சுனராசனது ஆயிரம் தோள்களையும் அறுத்து, அவனைக் கொன்று, அவ்வளவிலே கோபம் தணியாமல், இருபத்தொரு தலைமுறை அரசரைக்கொன்ற பரசுராமர், சடைமுடி விண்ணை எட்டத் தோள்கள் திக்கை முட்ட, மழுவாயுதமும் விற்படையும் தாங்கி, மேருமலை நடந்து வந்தாற்போல வந்தார்.

அவரைக் கண்டோர், வானைக் கீழே கவிழ்க்கவோ! மண்ணை ஆகாயத்திலோ பாதாளத்திலோ எறியவோ! எல்லா உயிர்களையும் எமனுக்கு இரையாக்கவோ! கண்கள் இரத்தங் கொப்புளிப்பனபோல அக்கினிகக்குகின்ற இவரது கோபகாரணம் யாதோ? எனக் கருதினர்கள்.

அவ்வாறு வந்தவரைத் தசரதர் கண்டு எதற்காக இவர் வந்தாரென்று அஞ்சுகின்றபோது, அவர், படைகள் பயந்தோடப் பேரிடிபோல ஆரவாரித்துக்கொண்டு இராமரெதிரே சென்றார். இராமர் இவர் ஆரோ என்று எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில், தசரதர் இருவருக்கும் இடையே சென்று, வந்தவரை வந்தனைசெய்வாராய்த் தரையில் முடிபடிய அடியில் விழுந்தார். அதனாற் கோபமாறாமல், அவர், இராமரை நோக்கி, "நீ ஒடித்த வில்வலி அறிவேன். உன் தோள்வலியைச் சோதிக்கும் விருப்புடையேன். அரசரை அதஞ்செய்த தோள்களிலே போர்செய்யும் தினவும் சிறிதுள்ளேன். இதுவே யான் வந்த காரணம்" என்றார்.

அப்போது தசரதர், "உலகமுழுவதையும் வென்று உமக்கென ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் ஒரு முனிவர்க்கு உதவிய உதாரசீலரே! திரிமூர்த்தியரோ உமக்கு எதிரல்லர்! சிறு மனிதர் ஒரு பொருளோ!

யாங்கள் உம்க்குச் செய்தற்குரிய வழிபாடுகளை இறுமாப்பினாற் செய்ய மறந்ததுண்டோ? எங்களைக் கோபித்தலை ஒழிவீராக. அரசரைச் சீறுதலை அருளால் நெடுங்காலமாக அகற்றியிருந்தீர். இப்போது எங்களை முனிதல் முறையோ! என்மகன் உயிர்நீங்குமேல், யான் என் சுற்றத்தாரனைவரோடும் இறப்பேன்! என் குலத்தை முற்றும் அற முடித்துவிடாதீர்! இதுவே, உம்பால், யான் இரப்பது" என்று காலில் வீழ்ந்தார்.

தம் காலில் விழுந்த தசரதரை இகழ்ந்து, பரசுராமர் இராமர்பாற் செல்லச் செல்லும் நோக்கம் கொல்லும் நோக்கமேயென்று தெரிந்து, தம்மாற் செய்யக்கூடியதொன்றுமின்மையை நினைந்து, தசரதர் தளர்ந்து அச்சமிக்கூர்ந்து அறிவுசோர்ந்தார்.

பரசுராமர், மானமுடைய இராசாதிராசன் மானம் விடுத்துக் காலில் விழுந்து மதிமயங்கிக் கிடத்தலைத் தாம் மதியாமையானது, பின்பு அவர்நிலையைத் தாம் அடையும் விதியை விலக்காமையாமென்று உணரும் அறிவில்லாராய், இராமரை நோக்கி, "நீ ஒடித்தவில் ஊனமுற்ற வில். அதன் வரலாற்றைக் கேள். சூரியனைப்போல் ஒளியும் மேருவைப் போல் வலியும் உடைய இரண்டு விற்களை விசுவகர்மன் நிருமித்தான். ஒன்றைச் சிவனும் மற்றொன்றை விட்டுணுவும் கைக்கொண்டார்கள். இரண்டில் எது அதிக வலியதென்று இமையவர் பிரமாவை வினவினர். அவர், எவ்வில் வல்வில்லென்று தெரிவது விபாசமாக, இருவரையும் போர்மூட்டிவிட்டார். போர்மத்தியில் சிவன்வில் முறிந்தது. அந்த ஊனவில் நீ ஒடித்தவில். விட்டுணு தம் வெற்றிபெற்ற வில்லை இருசிக இருடிக்குக் கொடுக்க, அவர் என் பிதாவுக்குக் கொடுக்க, அவர் எனக்குக் கொடுத்தார். இதைநீவளைத்தால், உன்னை ஒப்பார் இல்லை: நானும் குறித்த போரை நிறுத்துவேன். இன்னும் கேள். நான் இருபத்தொரு தலைமுறை யாசரைக் கொன்று, அவர்கள் இரத்த நீரில் என் பிதாவுக்குப் பிதிர்கடன் கழித்து, என் கோபத்தை அடக்கினேன். யான் செயித்த உலகனைத்தையும் ஒரு முனிவருக்குக் கொடுத்துவிட்டுத் துறவியாய், ஒரு மலையில் தவஞ்செய்துகொண்டிருந்தேன். நீ வில்லொடித்த ஓசைகேட்டுச் சீறிவந்தேன். இந்த வில்லை வளைக்க வல்லாயானால், வளைப்பாயாக" என்றார்.

இராமர் அவர் கூறியதைக்கேட்டுக் குறுஞ்சிரிப்புக்கொண்டு, வில்லை வாங்கி வளைத்து "நீர், அரசரையெல்லாம் கொன்ற கொலைஞரானும்,

இருடிபுத்திரராயும் தவசியாயு மிருத்தலால், கொல்லற் குரியீரல்லீர். இந்த வில்லில் தொடுத்த அம்பும் வீண்போவதன்று. இதற்கு இலக்கு யாது? விரைவாய் உரையீர்" என்றார்.

பரசுராமர் "கோபியாதீர்! நீர் விட்டுணுவே! உமது அம்பு பழுதுறாமல் அதற்கு என் தவத்தையெல்லாம் இலக்காக்குதிர்" என்றார். உடனே இராமர் அம்பைக் கைந்நெகிழவிட, அது பரசுராமர்தவமுழுவதையும் வாரி மீண்டது.

பரசுராமர் "புண்ணியரே! நீர் எண்ணும்காரியங்கள் இனிது நிறைவேறுக. விடை தருக" என்று தொழுது போயினர்.

அவர் தருக்கும் தவமும் அழிந்து போனபின், இராமர், உணர்வு ஒடுங்கி உயிர் உலைந்து உள்ளம் உருகிக்கொண்டிருந்த தசரதனைச் சமீபித்துத் தொழுதார்.]

210. வெளிப்படும் உணர்வினன், விழுமம் நீங்கியே
தளிர்ப்புறும் மத கரித் தானை யான், இடைக்
குளிப்புறும் துயர்க் கடற் கோடு கண்டவன்,
களிப்பெனும் கரை இலாக் கடலுள் ஆழ்ந்தனன்.

இ-ள். உணர்வு வெளிப்பட்டவராகித் துன்பம் நீங்கி (இன்பம்) தளிர்த்த தசரதர், (பரசுராமர் வந்ததற்கும் போனதற்கும்) இடையே (தாம்) முழுகிக்கிடந்த துன்பக்கடலின் கரையைக் கண்டவர் (அதில் ஏறின உடனே) கரையற்ற களிப்புக் கடலுள் (வீழ்ந்து) ஆழ்ந்தனர்.

விழுமம் - துன்பம். மதகரித்தானையான் - மதயானைச் சேனையை யுடைய தசரதன். இடை - நடுநேரம் (சங்க அகராதி)-இடையே உள்ள காலத்தில். குளிப்பு - மூழ்குதல். கோடு - கரை.

பரசுராமரால் நேர்ந்த துன்பத்தால் தசரதருக்கு உள்ளடங்கியிருந்த உணர்வு இராமர் தொழுதலைக் காண வெளிப்பட்டது. உணர்வு வெளிவரப்பெற்ற தசரதர் பரசுராமர் இல்லாததையும் இராமர் சேமமாயிருப்பதையும் கண்டு துன்பம் நீங்கினர்; பின்பு பரசுராமர் தோற்றதைக் கேட்டு அளவற்ற இன்பம் அடைந்தார். இந்நிகழ்ச்சிகளை மிக இனிமையாகவும் சுருக்கமாகவும் மூன்னிரண்டடிகளிற் கூறினர். கூறினவர்,

கூறினதையே, பின்னிரண்டடிகளில், வேறொருவிதமாக, விசேட இன்பத்துடன் வியப்பும் விளையக் கூறுவாராய்த் 'தசரதர், பரசுராமர் வரவே, துன்பக்கடலில் வீழ்ந்து, அவர் போனது தெரியுமளவும் அதில் முழுகிக்கிடந்து, அவர் போனது தெரியவே, அத் துன்பக் கடலினின்று கரையேறி, அவர் இராமரால் வெல்லப்பட்டதை அறிந்து இன்பக்கடலில் முழுகினார்' என்றார். என்றவர், தசரதர் பட்ட துன்பம் முடிவுற்றதுபோலன்றி அவர் உற்ற இன்பம் முடிவற்றதென்பதைக் குறிக்கத் துயர்க்கடற்குக் கரையுண்மையும் களிப்புக்கடற்குக் கரை யின்மையும் கூறிய அதிமதிநுட்பம் அதிசயமானது.

[பரசுராமர்வில்லை வளைத்து அவருக்குப் பழியை விளைத்த இராமரைத் தசரதர் ஆலிங்கனம் செய்து உச்சிமோந்து ஆனந்தக் கண்ணீராட்டினார்: "இவன் விரகறியாத இளம்பிராயத்திற் செய்த இந்த ஆண்மைத்தொழில், மூன்றுலகத்தோரும் ஒருங்கு சேர்ந்தும் முடிக்க முடியாதது. நல்வினைசெய்த எனக்கு இன்பமும் தீவினைசெய்த பரசு ராமருக்குத் துன்பமும் தந்த இந்த இளங்குமான் இருவினைசெய் தோர்க்கு அவரவர் செய்த வினைக்குத்தக்க பயன்களை இம்மை மறுமை யிரண்டிலும் ஈயும் இறைவன். இஃது உண்மை" என்றார்.

அப்போது தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். அவர்களுள் வருணனிடத்து இராமர் வில்லைக் காப்பாற்றிவைக்கும்படி சொல்லிக் கொடுத்து, தசரதராதியருடன் அயோத்தியை அடைந்தார்.

பின்பு சிலநாள் சென்றபின், தசரதர் பரதரை நோக்கி "உன் பாட்டனார் உன்னைக் காணும் விருப்புடையார். நீ கேகயநாட்டுக்கு ஏகுவாயாக" என்றார். பரதர், பிதாவைத் தொழுது சென்று இராமரை வணங்கி, அவரை அன்றி ஆவி வேறில்லாதவராதலால், உயிரைப் பிரிந்து உடல் சென்றாற்போலச் சென்று சத்துருக்கருடன் கேகய தேயத்தை அடைந்தார்.]

பாலகாண்டம் முற்றிற்று.

(தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

# மதங்கசூளாமணி.

## எடுத்துக்காட்டியல்.

[௬௨௨-ம் பக்கத் தொடர்ச்சி.]

௪. அவலச் சுவையை "ஆதுலராஜன் சரிதை"யி னுள்ளும் "இராம்மியன் சுசீலை சரிதை"யினுள்ளுங் காட்டினும்; வெகுளிச்சுவையை மேல்வரும் "சேனாதிபதிசரிதை"யினுட் காட்டுவாமாதலினால் அவலமும் வெகுளியுமுணர்த்துவதென யாம் எடுத்துக்கொண்ட "தீநட்புஞ்சியதீமோன்சரிதை"யைச் சுவைபற்றி யாராயும் அவசியமில்லை. இதனது வித்து, முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்னுஞ் சந்தியுறுப்புக்களை உறுப்பியலினுட் டொகுத்துக் கூறினும். நாடகபாத்திரருக்குப் பெயர்கொள்ளாது சந்தியுறுப்புக்களினமைப்பை வகுத்துக்காட்டி யப்பாற்செல்வாம். கதாநாயகனாகிய செல்வப்பிரபு பலருக்கு விருந்தளித்தலும், அன்னார் உண்டு களியாடலும், புலவர் ஓவியர் மணிகுயிற்றுநர் சூதர் மாகதர் என் றின்னோர் அவனிடம் பரிசில்பெற்று அவனைப் போற்றிநிற்றலும் முகத்தினுள் வருவன. பிரபு கடன்பட்டுக் கலங்குதலும், தனது பழையநண்பர் தனக்கு உதவுவார் என்னும் முழுநம்பிக்கையோடிருத்தலும், அவர் உதவார் என்றுகூறிய அறிஞனை வெகுண்டு நோக்குதலும் பிரதிமுகமாவன. பிரபுவினுடைய கருமகாரன் அவரது நண்பர்பலரிடம் போய் அவர் கடனால் வருந்துவதைத்தெரிவித்து உதவிபெற முயலுதலும், அன்னார் மறுத்தலும், பிரபு ஒரு சூழ்ச்சியினால், பழையநண்பரனைவரையும் விருந்துக்கழைப்பதுபோ லழைத்து அவர்முன் அழுக்குநீர்நிரம்பிய கலங்களை வைத்து, "நன்றிகெட்டநாய்களே! இதுதான் நான் இன்று உங்களுக்குத் தருகின்றவிருந்து" என்று அவர்கள்மேற் கலங்களை யெறிவதும் அன்னார் அல்லோலகல்லோலப்பட்டோடுதலும் கருப்பத்தினுள் வருவன. கதாநாயகன் காட்டிற்சென்று வசிப்பதும், கிழங்குபெறுவதற்காக நிலத்தினைத் தோண்டும்போது ஒரு பொற்குவையைக் கண்டு அதனை இழித்துக்கூறுவதும் அவ்வழிச்சென்ற ஒரு சேனைத்தலைவனும் அவனது

காதற்கிழத்தியிருவரும் கதாநாயகனை யணுகுதலும், அவன் அன்னோர் முகத்திற் பொற்காசுகளையெறிதலும், அவர்கள் காசுகளையெடுத்துக் கொண்டு நன்றிகூறிச்செல்வதும் கள்வர்சிலர் வருதலும் விளைவினுள் வருவன. கதாநாயகனாகிய தீமோனிடம் பொற்குவை யகப்பட்டிருக்கிறதெனக் கேள்வியுற்றுப் புலவர் ஓவியரென் றின்னோர் அவனை நாடிச் செல்வதும், அன்னோரையும் மனிதவர்க்கத்தையுந் தீமோன் இழித்துக் கூறுவதுப், சேனைத்தலைவன் தீமோனுடையபகைவரை யெதிர்த்து வெற்றிபெற்றுத் தீமோனை நகருக் கழைத்துச்செல்வதற்குக் காட்டினுட் சென்று தேடுவதும தீமோன் இறந்துகிடக்கக் காண்பதும் ஐந்தாஞ் சந்தியாகிய துய்த்தலினுள் வருவன. இனி மருட்கையு முவகையு முணர்த்தும் பெரும்புயற்சரிதையை யாராயப்புகுந்து முதலிற் கதைச் சுருக்கத்தைத் தருகின்றாம்.

பலவளம்நிறைந்த சீயதேசத்தை அலாயுதனென்னுமன்னன் அரசுபுரிந்துவருகின்றகாலத்தில், பிரபாகரன் என்னும் பெயரினையுடைய சிற்றாசன் சீயநாட்டின் ஒருபாகமாகிய மைலம் என்னுந் தேயத்தை யாண்டு வந்தான். அவன தம்பி அநாகுலன் வஞ்சனையினால் தனது தமையனையும் அவனது மூன்றுவயதுக்குழந்தையாகிய மாலதியையும் சுக்கானில்லாத ஒரு படவி லேற்றிக் கடலிற் றள்ளிவிட்டுத் தமையன்ஆண்டுவந்த தேயத்தைத் தா னாண்டுவந்தனன். அநாகுலனுடைய வஞ்சனையை ஒருசிறிதறிந்திருந்த கௌசிகனெனனும் பிரபு படவினுள்ளே உணவுப் பொருள்கள் சிலவற்றையும், புத்தகங்கள் சிலவற்றையும் அநாகுலன் அறியாவண்ணம் மறைத்துவைத்தனன். படவு கடலலையால் மொத்துண்டு, அலைவுற்றுச் சிலநாட்களுக்குப்பின் மணிபல்லவம் என்னுந் தீவை வந்தணுகியது. கௌசிகன் மறைத்துவைத்த உணவுப்பொருள்கள் பிரபாகரனுக்குப் பேருதவிபுரிந்தன. மணிபல்லவத்துக் கரையையடைந்த பிரபாகரன், மானிடசஞ்சாரமில்லாத அத்தீவிற் குடிசையொன்றமைத்துக்கொண்டு காலங்கழித்துவருகின்றநாளிற் புதல்வியாகிய மாலதி நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ச்சியெய்தினள். பிரபாகரன் படவினுள்ளிருந்த புத்தகங்களையெடுத்தாராயும் போது அவற்றினுள் ஒரு மாந்திரீகநூல இருந்தது. அதனை யெடுத்துக் கற்ற பிரபாகரன் மந்திரசக்தியின் வலிமையினாலே பவனவேகன் என்னும் வித்தியாதரனையும், வலிமுகன் என்னும் இயக்கனையுந் தனக்கு

அடிமைகளாக்கிக்கொண்டான். பவனவேகன் ஆகாயமார்க்கமாகச் சஞ்சரிப்பவன்; வேண்டும்போது வேண்டியஉருக்கொள்ளவும், தனது எஜமானாகிய பிரபாகரனுக்கன்றிப் பிறருக்குத் தோற்றாத மாயவுருக்கொள்ளவும், செயற்கருஞ்செயல்கள் பலவற்றைச் செய்யவும் வல்லவன். வலிமுகன் முசுமுகி யென்னும் இயக்கியின்புதல்வன்; தா யிறந்துவிட ஆதரிப்பாரின்றி மணிபல்லவத்தில் அலறித் திரிந்தான். மேல்முழுதும் நிறைந்த செம்பட்டைமயிருங் கோரரூபமுமுடைய இவனைப் பிரபாகரன் பிடித்துக்கட்டிக்கொண்டுவந்து மக்கள்மொழியை இயன்றவரைகற்பித்து விறகுபிளத்தல் முதலிய முரட்டுவேலைகள்செய்வதற்கு ஆளாக வைத்திருந்தான். அடிமைகள் இருவரையும் பெற்றபின்பு பிரபாகரனுக்குச் சிறிது ஆறுத லுண்டு; ஓய்வுநேரம்முழுவதிலும் தனது புதல்விக்குப் பாடஞ்சொல்லிவைத்து அவளைப் பலகலையுங்கற்ற பண்டிதையாக்கினான். மாலதிக்கு வயது பதினைந்தாயிற்று; அதாவது பிரபாகரனும் புதல்வியும் மணிபல்லவத்துக்குவந்து பன்னிரண்டு ஆண்டுக ளாயின. இவ்வெல்லையில், காத்திராப்பிரகாரமாகப் பிரபாகரன் தனது இராஜ்யத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளுவதும் மாலதி பல சுகுணங்களும் நிறைந்த பிரியவிரதன் என்னும் அரசிளங்குமாரனை நாயகனுகப் பெறுவதுமே நாம் எடுததுக்கொண்டசரிதையின் உள்ளுறையாவன.

கப்பலொன்று பெரியதொரு புயலிற்பட்டு அக்கப்பாடுறுவதோடு நாடகம் ஆரம்பிக்கின்றது. மணிபல்லவத்துக் கடலருகில் நின்ற மாலதி கப்பல் அலைவுறுவதைக் கண்டு அதனுள்ளிருக்கும் மானிடருயிருக்கு இன்னல் வந்துவிடுமோ வென்றஞ்சித் தனதுதந்தையை நோக்கி அவனது மந்திரசக்தியினாலே புயலை நிறுத்திவிடும்படி, அவனைக் குறையிரந்து வேண்டிக்கொள்ளுகிறாள். பிரபாகரன் கப்பலில் உள்ளோரது உயிருக்குச் சேதம்வாராதென்று கூறியதோடு தனது மந்திர வலிமையினால் தானே புயலை உண்டுபண்ணியதாகவும் அதனாற் பெரு நன்மை விளையப்போகிறதென்றுங் கூறித் தனது வரலாற்றையுந் தெரிவித்துத் தனது மந்திரவலிமையினாலே மகளை அயர்ந்து நித்திரையாகும்படி பண்ணுகிறான். இங்ஙனஞ் செய்தபின் பிரபாகரன் பவனவேகனை அழைத்துத் தனது கட்டளைப்படி எல்லாம் ஆயிற்றா என்று விசாரித்தான். புயலை யுண்டாக்கியபின்னர்க் கப்பலிலிருந்தோரனைவரை

யும் உயிர்ச்சேதமின்றிக் கரைசேர்த்திருப்பதாகவும், கப்பலைச் சிறிதேனும் பழுதுபடாமல் ஒரு துறை சேர்த்திருப்பதாகவும் பவனவேகன் தெரிவித்தான். பிரபாகரனும், "நன்று; கப்பலிலிருந்தோருள் இராஜகுமாரனை இவ்விடம் அழைத்துவா" என்றனன். இவ்விராஜகுமாரன் சீயதேசத்தரசன் அலாயுதனதுபுத்திரன் பிரியவிரதன். அலாயுதனும் அவனது தம்பி சங்கவர்ணனும், புதல்வன் பிரியவிரதனும், அநாகுலனும், கௌசிகனும் பிற பிரபுக்களும் சமுத்திரயாத்திரைசெய்யும்போது அன்னார் ஏறிச்சென்ற கப்பல் மணிபல்லவத்துக் கரையோரமாகச் சென்றது. இதனைத் தனது மந்திரக்காட்சியினாற் கண்ட பிரபாகரன் புயலையுண்டாக்கிக் கப்பலிலிருந்தோரனைவரையும் கப்பலையும் சேதமின்றிக் கரைசேரும்படி செய்தனன். அங்ஙனமாயினும் அரசன் தன் புதல்வன் கடலிலமிழ்ந்துவிட்டானெனவும், இராஜகுமாரன் தன் தந்தையுயிர் துறந்துவிட்டானெனவும், அனைவரும் கப்பல் மூழ்கிவிட்டதெனவும், தம்முள்ளேயெண்ணித் துன்புற்றுத் தீவகத்தின் பற்பலபாகங்களிலும் ஒருவரையொருவர் தேடி அலைந்து திரிகின்றனர். இவ்வெல்லையிற் பவனவேகன் உருத்தோற்றுவண்ணம் இராஜகுமாரனது முன்னிலையிற்போய் நின்று,

"மஞ்சட் பரந்தவிந்த மணன்மீதி லென்னுடனே
கொஞ்சிக் குலாவிவிளை யாடுதற்கு வாரீரோ
வாரீரோ நடமிடுவோம் வெளவெளவென நாய்குரைக்கச்
சீராகக் குக்கூவென்னுஞ் சேவலொலி கேட்குதையோ"

என்று பாடினான்.

பிரியவிரதன்: (அதிசயமுற்று)

"வானகத்ததோமண்ணகத்ததோமனநிறைக்குமிவ்வினியநல்லிசை
கோனையெண்ணியேசிந்தைநைந்தியான்குரைகடற்கரைப்புறமிருக்கையிற்
றேனையொத்தவிவ்விசைதொடர்ந்தெனைச்சிறைசெய்கின்றதாலுறுவதோர்கிலே
யானகத்துளோரெண்ணமின்றியேயிசைவருந்திசைக்கேகுவேனரோ" [ன்
[புதுமைபற்றிய மருட்கைச்சுவை]

என்று இசைவருந் திசையைநோக்கிச் சென்றான். நித்திரைநீங்கியெழுந்திருந்த மாலதி பிரியவிரதனைக் கண்டமாத்திரத்தே (அதுவரையும் அழகுநிறைந்த ஆடவரைக் காணாதவளாதலினாலே புதுமைபற்றிய மருட்கையுற்று) தன் தந்தையைநோக்கி, "ஐய! அதோ தோற்றுகின்ற எழிலுருவத்தையுடையோன் தேவனா? மனிதனா?" என்றனள்.

பிரபாகரன்: நம்மைப்போலவே அவனும் பசிவரும்வேளையில் உணவுட் கொண்டு துயில்வருநேரத்திற் றுயிலுகின்ற மனிதவகுப்புக்கு உரியோன்தான். கப்பலிலிருந்து பிரிந்த தனது நண்பரைத் தேடியலைகின்றான். கவலையினால் அவன்முகம் வாடியிருக்கின்றது.

மாலதி: இத்தனையழகனை நானொருபோதுங் கண்டதில்லை; இவன் தெய்வத்தன்மையுடையவனென்றே சொல்லவேண்டும்.

பிரியவிரதன்: (அணுகிவந்து)

இன்னிசைக்குத் தலைவியே யிமையவரும் பணிந்தேத்து மெழி லணங்கே
பொன்னுலகத் திருந்திவணீ புகுந்தனையென் றென்னிதயம் புகலா நிற்கும்
மன்னுமிந்தத் தீவகத்தி லுறைதியோ வழியெனக்கு வழுத்து வாயோ
கன்னிகையோ பிறன்மனையாங் காரிகையோ வெனவிரைவிற் கழறு வாயே.

மாலதி: ஐய! அதிசடம்வேண்டாம். நான் கன்னிகையே!

பிரியவிரதன்: ஆ! ஆ! இம் மடமொழி என்மொழியில் உரையாடுகின்றாள். இச் செம்மொழியைப் பேசுவோருள் யானே தலைவன். இம் மொழிவழங்கும்நாட்டில் யான் இருந்தாலோ!

பிரபாகரன்: சீயதேசத்துமன்னன் இருக்கும்போது நீ தலைவனாவ தெப்படி?

[தன் மகளுக்கும் பிரியவிரதனுக்கு மிடையி லுள்ள காதலின் அளவைச் சோதிக்கவிரும்பிய பிரபாகரன் பிரியவிரதனைநோக்கிப் பின்வரும் கடுமொழிகளையுங் கூறுகின்றான்.]

இராஜத்துரோகம் பேசுகின்ற தூர்த்தா! இங்கு வா; உன்கையையுங் காலையும் விலங்கிடுகிறேன்; உலர்ந்தகிழங்கும் உப்புத்தண்ணீருமன்றிப் பிறவுணவு தாராது உன்னைச் சிறையில் வைக்கிறேன்.

பிரியவிரதன்: "இதற்கு நான் ஒருப்படேன்" என்று வாளையுருவுகிறான்.

[பிரபாகரனுடைய மந்திரவலிமையினாலே பிரியவிரதனுடைய வாளேந்திய கை ஸ்தம்பித்துநின்றுவிட்டது.]

மாலதி: பல்வாறுகப் பரிந்துபேசியுங் கேளாது பிரபாகரன் பிரியவிரதனை அழைத்துச்செல்லுகிறான்.

[இவ்வளவோடு முகம் முடிகின்றது.]

தீவின் ஒருபக்கத்தில் அலாயுதனும் அவன்தம்பி சங்கவருணனும் அநாகுலனும் கௌசிகனும் பிறரும் வருகின்றனர். பவனவேகன் உருவெளிப்படாதுநின்று இன்னிசைக்கீதங்களைப் பாட அநாகுலனும் சங்கவருணனும் ஒழிந்த அனைவரும் துயில்கின்றனர். சகோதரத்துரோகியாகிய அநாகுலன் சங்கவருணனை நோக்கி அலாயுத மன்னனைக் கொன்றுவிட்டுச் சீயதேசத்துமன்னவனாகும்படி சொல்லி அவனைத் தன் துர்ப்புத்திக்கு ஆளாக்குகிறான். துயின்றுகொண்டிருக்கிற கௌசிகனையும் அலாயுதமன்னனையும் கொல்லும்படி அநாகுலனும் சங்கவர்ணனும் கையில் வாளெடுத்துக்கொண்டுவரப் பவனவேகன் கௌசிகனுடையகாதில் ஒரு பாடலைப் பாடியவனைத் துயிலினின்று எழுப்ப அவன் அலாயுதமன்னனை யெழுப்புகிறான். துயிலினின்றெழுந்த இருவரும் அநாகுல சங்கவர்ணருடைய துர்நினைவைக் குறிப்பினுலுணர்ந்து கொண்டு பிரியவிரதனைத் தேடிச் செல்கின்றனர். தீவின் மற்றொருபக்கத்தில் இடிமுழக்கத்தினிடையே வலிமுகன் ஒருவிறகுக்கட்டோடு வருகிறான். அவனைத் திரிகூடன் என்னுங் கப்பற்சேவகன் கண்டு மற்சமோ மனிதனோவென ஐயுற்று மறைந்திருக்கின்றதருணத்திற் சுரைநாவன் என்னும் மற்றொருசேவகன் கள் நிறைந்த ஒரு புட்டியோடு வருகின்றான். இருவரும் வலிமுகனை யணுகி யவனது வரலாற்றை வினவினர்கள். வலிமுகன் தன் அன்னை முசுமுகி அத்தீவுக்கு அரசியாயிருந்ததாகவும், தான் பிரபாகரனுடைய மந்திரவலிமையினு லவனுக்கு அடிமைப்பட்டுத் துன்புறுவதாகவும், திரிகூடனும் சுரைநாவனும் ஏதாவது ஒரு சூழ்ச்சியினுற் பிரபாகரனைக் கொன்றுவிட்டாற் றான் அவர்களுக்குப் பணிவிடைசெய்துகொண்டு வாழ்தற் கொருப்படுவதாகவும் கூறினுன். இதனைக் கேட்ட சேவகரிருவரும் அவ்வண்ணமே செய்வதாக வாக்களித்து வலிமுகனை யழைத்துக்கொண்டு செல்கின்றனர்.

[இவ்வளவோடு பிரதிமுகம் முடிகின்றது].

பிரபாகரனுடைய கட்டளைப்படி பிரியவிரதன் மாக்கட்டைகளை நிரையாக அடுக்கிக்கொண்டு நிற்கிறுன். மாலதி யவன்பக்கத்திற் பலவாறுகிய இன்பமொழிகளைக் கூறிக்கொண்டு நிற்கிறுள். இவரிருவரையும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிரபாகரன் உள்ளம் மகிழ்ந்து இவரது நன்மைக்காகச் செய்யவேண்டிய செயல்கள் இன்னுஞ்

சிலவுள என்று தனக்குள்ளேசொல்லிக்கொண்டு புறத்தேபோய்த் தனது மந்திரவலிமையினாலே ஆகாயமார்க்கமாகச் சென்று அலாயுதமன்னனும் பிறரும் நிற்கின்ற இடத்தை யடைகிறான். பிரபாகரனுடைய கட்டளைப் படி பவனவேகன் பல மாயருபங்களைப் படைத்துவிட அவை சென்று அலாயுதமன்னன் முதலியோரைச் சூழ்ந்துநின்று நடிக்கின்றன. இவற்றைக் கண்டு அதிசயமுற்றிருந்த மன்னனாதியோர் முன்னிலையில் அம் மாயாரூபங்கள் பல தட்டுக்களிற் பழம் பலகாரம் முதலியவைகளைவைக் கப் பசியினால் வருந்தியிருந்த மன்னனும் பிறரும் அவ்வுணவினை யுண்ணப்புகுந்தனர். அத்தருணத்திற் பவனவேகன மாயத்தினாற் பழம் பலகாரம் முதலியவற்றை மறையும்படிசெய்துவிட்டு ஒரு பெரிய பருந்துருபமாகத் தோற்றிக் குழுமியிருந்த அலாயுதமன்னனாதியோரைப் பார்த்து, "நீவிர் கொடுந்தொழிலாளர்; மக்களிடையே வசித்தற்கு அருகரல்லாதவரானபடியாற் கடல் நும்மை மனிதசஞ்சாரமில்லாத இத்தீவில் உமிழ்ந்துவிட்டது; நான் நுமது அறிவினைமயக்கி நும்மை உன்மத்தராக்கியிருக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட மன்னனாதியோர் உடைவாளையுருவிப் பருந்தாகவந்த பவனவேகனை வெட்டுதற்கு முயன்றனர். அன்னார் துகைகள் ஸ்தம்பித்துநின்றுவிட்டன. பவனவேகன் நகைத்து "மூடர்களே! நானும் என் பரிசனரும் விதியின்செயலை முற்றுவிக்குங் கருவிகள்; நுமது ஆயுதங்கள் எம்மைத் தீண்டா. மைலத்து மன்னனாகிய பிரபாகரனையும் அவனது மூன்றுவயதுக் குழந்தையையும் ஆதாவின்றி யலைகடலில்விட்ட துஷ்டராகிய நுமக்கு இரங்குவாருமுளரோ" என்றனன். மாயாரூபங்கள் மீட்டுந் தோற்றி மன்னனாதியோரைப் பரிகசித்து நடித்தன. அன்னார் பிரபாகரனுக்குத் தாம் விளைத்த தீமையை நினைந்து துன்புற்றிருப்பதோடு கருப்பம் முடிகின்றது.

பிரபாகரன் தனது மந்திரசக்தியினால் தேவமாதர்பலரைப் படைத்துப் பிரியவிரதனும் மாலதியுங் கண்டு களிகூரும்படி தான் படைத்த தேவமாதரைக்கொண்டு நடனஞ்செய்விப்பதும், வேட்டைநாய்களைப் படைத்து வலிமுகன், திரிகூடன், சுரைநாவன் என்னும் மூவரையுந் துன்புறுத்துவதும் விளைவினுள் வருவன.

பவனவேகன் பிரபாகரனுடைய கட்டளைப்படி அலாயுதன் சங்கவருணன் அநாகுலன் கௌசிகன் முதலியோரைக் கொண்டுவந்து நிறுத்த

லும், அல்லாயுதன் தன்மைந்தன் பிரியவிரதன் மாலதியோடு விளையாட்டயர்ந்துகொண்டிருப்பதைக் காண்பதும், இளையாரிருவிருடைய மணவினைக்கு இயைவதும், பிரபாகரனை அழைத்துச்சென்று மைலத்துக்கு மன்னனுக்க ஒருப்படுவதும், பிரபாகரன் பவனவேகனை விடுதலையாக்கி விட்டுத் தனது மந்திர நூல்களைக் கடலினுள் எறிந்துவிடுவதும், அனைவரும் சீயதேசத்துக்குப்போகக் கப்பலேறுவதும் துய்த்தல் என்னும் ஐந்தாஞ்சந்தியினுள் வருவன.

வலிமுகன், சங்கவருணன், அநாகுலன் என்போரது சிறுமை வெளிப்படுமிடத்துச் சிறுமைபற்றிய மருட்கைச் சுவையும், பிரபாகரனது பெருந்தன்மை வெளிப்படுமிடத்துப் பெருமை பற்றிய மருட்கைச்சுவையும், பிரபாகரனது மந்திரவலிமையினாலே பீழம் முதலியவை தோற்றி மறைவதைக்கண்டதிசயிக்கும்போது ஆக்கம்பற்றிய மருட்கைச்சுவையுந் தோற்றுவன. பெருமை சிறுமையென்புழி அளவுமாத்திரமல்ல, அத்தன்மையுங் கொள்ளப்படும். "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே" எனத் தொல்லாசிரியர் வகுத்துக்கூறிய மருட்கைச்சுவைக்கு இந்நாடகம் இலக்கியமாயினமை காண்க.

ரு. அச்சமுணர்த்தும் மகபதிசரிதையை யாராயப்புகுவாம்.

சுடுகாட்டிலே காரிருளிலே இடிமுழக்கமும் மின்னலுந் தோற்ற அவற்றிடையே சவந்தின்பெண்டிராகிய மூன்று இடாகினிமாதர் தோற்றிச் சிறிதுநேரம் வார்த்தையாடி மறைகின்றனர்.

[இது முதலங்கத்தின் முதற்காட்சியாகும்].

அங்கதேயத்து மன்னனாகிய இடங்காராஜன் தனது புதல்வராகிய மங்கலவர்ம்மன் அனலவர்ம்மனோடும் பரிசனரோடும் தோற்றி மகபதியென்னுஞ் சேனைத்தலைவனுடைய இராஜபத்தியையும் வீரச்செயலையுங் கேள்வியுற்று அவனைத் தனது அரசியலின்கீழுள்ள கூடாநாட்டுக்கு அதிபதியாக்கும்படி மந்திரிமாருக்குக் கட்டளையிடுகிறான்.

[இது முதலங்கத்தின் இரண்டாங் காட்சி].

சுடுகாட்டிலே முன்போலக் காரிருளிலே இடாகினிமாதர்மூவருந் தோற்றித் தாம்விளைத்த தீச்செயல்களைக் கணக்கிட்டுக்கொண்டிருக்கும்

சமயத்தில் அவ்வழியே சேனைத்தலைவராகிய மகபதியும் தனபதியும் வருகின்றனர்.

தனபதி: (இடாகினிமாதரைக் கண்டு) ஈதென்ன? வற்றிக்காய்ந்த உடலும்கோரரூபமுமாகத்தோற்றுகிற இவை இவ்வுலகில் வாழ்வனவா? நீவிர் உயிருள்ள தோற்றங்களா? மனிதர்வினவுக்கு விடையளிப்பீரா? வற்றிக் காய்ந்த உதட்டிலே நீவிர் விரலைவைத்திருப்பதைப் பார்க்கும்போது எனது வார்த்தை நுமக்குப் புலப்படுகிறதென்றெண்ணவேண்டியிருக்கிறது. நீவிர் பெண்பாலராகத் தோற்றுகிறீர்; நுமக்குத் தாடிமயிரிருக்கின்றபடியாற் பெண்பாலரென்று சொல்லவும் இடமில்லை.

மகபதி: நீவிர் யாவர்? வார்த்தைபேச இயலுமானால் என் கேள்விக்கு மறுமொழி கூறுவீர்.

முதல் இடாகினி: மகபதியே வாழ்க! கலாபநாட்டுக்கு அதிபதியே வாழ்க!

இரண்டாம் இடாகினி: மகபதி வாழ்க! கூடாரநாட்டுக்கு அதிபதியே வாழ்க!

மூன்றும் இடாகினி: மகபதியே வாழ்க! முடிமன்னனுவோனே வாழ்க!

தனபதி: (இடாகினிகளை நோக்கி) காலத்தின் விளைவினைக் கருதியுரைக்கக்கூடிய வன்மை நுமக்கு உளதாயின் எந்தத்தானியம் வளருமென்பதை யாராய்ந்து சொல்லுவீராக. நான் அஞ்சவும் மாட்டேன்; நும்மை யிரந்துநிற்கவும் மாட்டேன்; நுமது தயவையோ வெறுப்பையோ நான் பொருட்படுத்தவில்லை.

முதல் இடாகினி: வாழ்க!

இரண்டாம் இடாகினி: வாழ்க!

மூன்றும் இடாகினி: வாழ்க!

முதல் இடாகினி: மகபதியிற் றாழ்ந்தாய், மகபதியி னுயர்ந்தாய்.

இரண்டாம் இடாகினி: அத்தனை பாக்கிய மில்லை, என்றாலும் பாக்கியவானே.

மூன்றும் இடாகினி: நீ மன்னனுகமாட்டாய், மன்னர்க்குத் தந்தையாவாய். மகபதியே தனபதியே நீவிர் வாழ்க.

மகபதி: நீவிர் சொன்னதை விளக்கமாகச் சொல்லுவீர். நான் கலாப நாட்டுக்கு அதிபன் என்பதை யறிவேன்; கூடாநாட்டதிபன் உயிரோடிருக்கும்போது நீவிர் என்னைக் கூடாநாட்டதிபனென்றுவாழ்த்திய தென்னை? நான் மன்னனுவதும் ஆகாதகாரியமே.

[இடாகினிகள் மறைந்துவிடுகிறார்கள்.]

இடங்கராஜனது மந்திரிமார் வந்து மன்னன் மகபதியைக் கூடாநாட்டுக்கு அதிபனுக்கியிருப்பதாகக் கூறுகின்றார்கள். அவர் வார்த்தையைக் கேட்ட மகபதி இரண்டாம் இடாகினியுடையவார்த்தை நிறைவேறியதைக்கண்டு அகமகிழ்ந்து தான் மன்னனுவதும் நிச்சயமென்று தன்னுள்ளே நினைத்து மகிழுகிறான்.

[இந்நிகழ்ச்சிகள் முதலங்கம் மூன்றுங் காட்சி.]

மகபதி தனபதியாகிய சேனைத்தலைவ ரிருவரும் அரமனைக்குப்போய் இடங்கராஜனைப் பணிந்துநின்றனர். மன்னன் அவரோடு கலந்துரையாடியதறபின் தானுந் தன்புதல்வ ரிருவரும் சிறிதுதூரத்திலுள்ள ஒரு நகரிக்குப் போக எண்ணியிருப்பதாகச் சொல்லுகிறான். வழியிற் றன் மனையிற் றங்கியிருந்துபோகவேண்டு மென்று மகபதி குறையிரந்து கேட்க மன்ன னுருப்படுகிறான்.

[இவை முதலங்கம் நான்காங்காட்சி.]

மகபதியின்மனைவியாகிய மகபதிப்பிரியை தனது நாயக னெழுதிய கடிதத்தைப் படித்து இடாகினிக ளுரைத்த வாழ்த்துரையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு சேவகன் வந்து இடங்கராஜனும் பரிசனரும் மகபதியினுடையமனையில் இராத்தங்கிப்போவதற்கு வருவதாக உரைக்கின்றான். சிறிதுநேரத்தில் மகபதியும் வந்து அந்தச்செய்தியையே தெரிவிக்கின்றான்.

மகபதி: என் பிரியநாயகியே! இடங்கராஜன் இன்றிரவு இங்கு வருகின்றார்.

மகபதிப்பிரியை: அவர் இங்கிருந்து என்று போகின்றார்.

மகபதி: ஒருவேளை நாளை யிவ்விடமிருந்து புறப்படலாம்.

மகபதிப்பிரியை: அந்த நாளை ஒருநாளும் வரப்போவதில்லை. என் கண வா! நினது முகக்குறி திறந்தபுத்தகம்போல அகத்தேயுள்ள எண்ணங்களையெல்லாம் எனக்குப் புலப்படுத்துகின்றது. தீங்கற்ற புஷ்பம்போல நின்முகங் காணப்படினும் பூவினுள்ளிருக்கின்ற புழு என் கண்ணுக்கு நன்கு தோற்றுகிறது. வருகிற அதிதியை நான் உபசரிக்கிறேன்: இன்றிரவைக்கு நீர் செய்யவேண்டிய பெருங்காரியத்தைச் செய்துமுடிப்பீராயின் இனி வருகின்ற இரவு பக லெல்லாம் நாம் முதன்மையுற்றிருப்போம்.

மகபதி: இவ்விஷயத்தை இன்னும் ஆலோசிக்கவேண்டும்.

மகபதிப்பிரியை: ஏடுத்தகாரியம் முடியுமுன் கலக்கமுற்றோன் அஞ்சினவனாவான்; ஆகவேண்டியவற்றை யான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[இவை முதலங்கம் ஐந்தாங்காட்சி.]

அரசனும் மங்கலவர்ம்மனும் அனலவர்ம்மனும் தனபதியும் மாதவனென்னும் மந்திரியும் பிற பரிசனரும் தீவட்டிவெளிச்சங்களோடு மகபதியின்வீட்டுக்கு வருகிறார்கள். அரசன் மகபதியின்மனை யழகானது என்று சொல்லிக்கொண்டிருக்கிறவெல்லையில் மகபதிப்பிரியை வந்து இனிய மொழிகள் கூறி மனையினுள் ளழைத்துச் செல்லுகிறாள்.

[இவை முதலங்கம் ஆறுங்காட்சி.]

மகபதி தனியிடத்தில் நின்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது அவன்மனைவி வந்து ஆசைவார்த்தைகூறி இடங்காராஜனைக் கொன்றுவிடும்படி தூண்டுகிறாள்.

[இது முதலங்கம் ஏழாங்காட்சி. இவ்வளவோடு முகம் முடிகின்றது.]

துயிலுகின்ற இடங்காராஜனைக் கொல்லநினைத்து இராஜனுடைய படுக்கையறையைநோக்கிப் போகும்போது மகபதியின் கண்முன்னே இரத்தந்தோய்ந்த ஈட்டி யொன்று உருவெளித்தோற்றமாகக் காணப்படுவதும், அவன் அஞ்சிப் பின்வாங்குவதும், மகபதிப்பிரியை வந்து ஆசைவார்த்தை கூறி ஊக்கப்படுத்துவதும், அவன் முற்பட்டுச்செல்வதும், இரத்தந்தோய்ந்தகையோடு வருவதும், மறுநாட்காலையில் மாதவனும் பிறரும்வந்து இடங்காராஜனுடைய உடலத்தைக் காண்பதும், மகபதியும் மகபதிப்பிரியையுந் துன்புற்றார்

போலப் பிரலாபிப்பதும், அரசனுடைய சயனக்கிருஹத்தைக் காத்திருந்த காவலாளர் கள்ளினை நிறையவுண்டமையினாலே மயக்கமேலிட்டு அரசனைக் கொன்றுவிட்டாரென்று அவர்மேற் குற்றஞ்சாட்டுவதும், அதற்குச் சான்றாக அன்னாருடைய முகத்தினுங் கத்தியினும் இரத்தக் கறை படிந்திருப்பதைக் காட்டுவதும், காவலாளரிருவரையும் மகபதி கொன்றுவிடுவதும், மகபதியினுடையகுறிப்பினை யறிந்த மங்கலவர்ம்மனும் அனலவர்ம்மனும் தம்முயிர்க்குச் சேதம் வந்துவிடுமோ வென்றஞ்சிக் கலிங்கநாட்டுக்கு ஓடிவிடுவதும், நாட்டைவிட்டோடிய மங்கலவர்ம்ம அனலவர்ம்மரே தந்தையைக் கொன்றாரென்று மந்திரி பிரதானியர் நிச்சயிப்பதும், காலஞ்சென்ற அரசனுக்கு நெருங்கியசுற்றத்தாலும் வலிமை பொருந்திய சேனைத்தலைவனுமாகிய மகபதியே மன்னாதற்குத்தக்கவனென்று அனைவரும் நிச்சயித்து மகபதிக்கு மணிமுடிசூட்டுதலும் பிரதிமுகமாவன.

இடாகினிகள் தனபதியை, "மன்னர்க்குத் தந்தையாவாய்" என்று வாழ்த்திய வாழ்த்துரையை நினைத்து மகபதி துன்புறுவதும், கொடிய பாவச்செயலினாலே தான் பெற்றுக்கொண்ட இராஜ்யந் தனக்குப்பின் தன் சந்ததியாருக்குப் போகாது மாற்றானாகிய தனபதி சந்ததியாருக்குப் போகப்போகின்றதே யென்று ஏக்கமுற்ற மகபதி கொலைத்தொழின்மாக்களை யழைத்துத் தனபதியையும் அவனதுபுதல்வன் வளைவணனையும் கொன்றுவிடும்படி கட்டளையிடுவதும், அன்னார் நள்ளிருளில், தனபதியைக் கொன்றுவிடுவதும், வளைவணன் தப்பியோடுவதும், மகபதி மந்திரி பிரதானியருக்கும் பிறருக்கும் பெரியதொரு விருந்தளிப்பதும், அரசனாகிய மகபதிக்கென் றிடப்பட்ட ஆசனத்தில் தனபதியின் பிரேதரூபந்தோற்றி யுட்கார்ந்திருப்பதும், அதனைப் பிறர் காணாதிருக்க மகபதிமாத்திரங் கண்டு அஞ்சுவதும், ஜனங்கள் மகபதியினுடையசெயலைக் கண்டு ஐயுறுவதும், மாதவனென்னும் மந்திரி கலிங்க நாட்டுக்கு ஓடிவிடுவதும் கருப்பம் ஆவன.

இடாகினிமாதர் தோற்றி நாய்நாக்கு, பல்லியின்கால், ஆந்தைச் சிறகு, வெளவாற்றோல், குழந்தை கைவிரல் என்றின்னனவற்றை யிட்டு உதிரநிணத்தைப் பெய்து கூழடுவதும், மகபதி வந்து மேல் நடக்கப் போவனவற்றைத் தெரிவிக்கும்படி இடாகினிகளை வினவுவதும், கூழடு

கின்ற பானையினின்று ஆயுதமணிந்த ஒரு தலை தோற்றி, "மகபதியே மாதவனைப்பற்றிக் கவனமாயிரு". என்று சொல்லி மறையச் சிறிது நேரத்துக்குள் இரத்தம்போல் மேனியையுடைய ஒரு சிறுகுழந்தை தோற்றி "மகபதியே யஞ்சாதிரு, ஸ்த்ரீ பெற்ற மைந்தனால் உனக்குத் தீங்கு விளையாது" என்ன அதன்பின்னர் முடிசூடிய ஒரு பாலன்வடிவம் கையி லொரு சிறு மரத்தைத் தாங்கி யெழுந்து "மகபதியே சிங்கம்போல் அச்சமற்றிரு, வர்ணாரணியம் நின் நகரிக்குவந்தாலன்றி நீ தோல்வி யடையப்போவதில்லை" யென்று சொல்லுவதும், மகபதியின்கண்முன்னே தனபதியும் அரசர் எண்மருந் தோற்றுவதும், இடாகினிகள் மறைந்து விடுவதும், மகபதி மாதீவன்மனைக்குக் கொலைத்தொழின்மாக்களை யனுப்பி மாதவனது மனைவியையும் புதல்வனையும் கொல்விப்பதும், மாதவனும் மங்கலவர்ம்மனும் இவற்றையெல்லாங் கேள்வியுற்றுக் கலிங்க நாட்டுச் சேனைகளோடு அங்கநாட்டை யெதிர்க்க நிச்சயிப்பதும் விளைவு ஆவன.

மகபதிப்பிரியை வியாதியினால் துன்புறும்போது தன்னை மறந்து தன் மனத்திற் கிடந்த இரகசியங்களை வெளியிடுவதும், அதனைக் கேட்டு நின்றவைத்தியன் முதலியோர் இடங்கராஜனைக் கொன்றவர் யாரென அறிந்துகொள்வதும், மங்கலவர்ம்மனுஞ் சேனைகளும் வர்ணாரணியத் துக் கூடாக வரும்போது ஒவ்வொரு மரக்கிளையைவெட்டிக் கையி லேந் திக்கொண்டுவருவதும், காவலாள னொருவன் வர்ணாரணியம் நகரியை நோக்கி வருகின்றதென மகபதிக்கு உரைப்பதும், மகபதி யச்சமுற்றுப் பின்பு போர்க்கோலங்கொண்டு வெளிச்செல்வதும், மாதவனும் மகபதி யுந் தனியமர்புரிவதும், ஸ்த்ரீபெற்ற மைந்தனாற் றனக்கு அழிவில்லை யென்று மகபதி யுரைப்பதும், அன்னை யிறந்தபின் அவள் வயிற்றைக் கிறி மருத்துவர் தன்னை யெடுத்தமையினால் தான் ஸ்த்ரீபெற்ற மைந்த னில்லை யென்று மாதவ னுரைப்பதும், மாதவன் கைவாளால் மகபதி யிறப்பதும் மங்கலவர்ம்மன் அரசனாவதும் துய்த்தல் என்னும் ஐந்தாஞ் சந்தியாவன.

"அணங்கே விலங்கே கள்வர்தமிறையெனப், பிணங்கல் சாலா வச்ச நான்கே" யென்புழிக் கூறிய நால்வகை யச்சத்தினுள் அணங்கினாலும், அரசனாலும் எய்திய அச்சச்சுவை இந்நாடகத்தினுள் நிரம்ப வத்தமை

காண்க. "அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறுகிய பதினெண் கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற் றொழிலராகிய சவந்தின்பெண்டிர்முதலாயினரும் உருமிசைத்தொடக்கத்தனவு", மென்ன உறுப்பியலுட் கூறினும். பெரும்புயற்சரிதையினுட் டோற்றுகின்ற மாயரூபங்கள் அச்சத்தை விளக்காது மருட்கையை விளைப்பதும், இந்நாடகத்தினுட் டோற்றுகின்ற இடாகினிகள் மருட்கையொழித்து அச்சத்தை விளைப்பதும் நுணுகி ஆராயற்பாலன. தலைவனது மரணத்தை யரங்கத்திற் காட்டுதல் கூடாதென வடமொழி நூல்கள் கூறுவன. இடங்கராஜனதுமரணம் வெளிப்படையாகக் காட்டப்படாது குறிப்பினுலுணர்த்தப்பட்டதை நோக்குக.

௬. பெருமிதமும் பிறசுவையு முணர்த்தும் வணிகதேயவர்த்தகன்சரிதையை யாராயப்புகுவாம்.

மணலிநகரத்தில் வசித்த ஒரு செல்வப்பிரபு ஆண்மக்களில்லாமையினாலே தனது பொருள்முழுவதையும் தன் மகள் விஜயைக்கு உரிமையாக்கிப் பொன்னினுலும், வெள்ளியினுலும், ஈயத்தினுலும் மூன்று பேழைகளைச்செய்து, அவற்றினுள் ஒன்றினுள்ளே விஜயையினுடைய சாயலெழுதிய சித்திரத்தை வைத்து, யாவனொருவன் சித்திரம்வைக்கப் பட்டிருக்கின்ற பேழை யிதுவென்று நிச்சயித்துச் சொல்லுகிறுனோ அவனுக்கே விஜயை மனைவியாகவேண்டுமென்று ஏற்பாடுசெய்து இவ்வுலகவாழ்வை நீத்தனன்,

[நாடகத்துக்குப் புறம்பாகிய இவ்விஷயத்தைக் கதைத்தொடர்பை யறிந்துகொள்வதற்காக ஈண்டுத் தந்தனம்.]

விஜயையைப் பெறவிரும்பிய வாசவனென்னும் வணிகதேயத்து வணிகன் தனது நண்பனுகிய அநந்தனென்னும் வணிகனையடைந்து தான் மணலிநகருக்குச் சிறப்பாகப் போவதற்கு மூவாயிரம்பொன் கடன் கொடுக்கும்படி கேட்டனன். அநந்தன் தன்னிடம் கைக்காசில்லாதிருந்தமையினுல், சாபலனென்னும் கோமுட்டிச்செட்டியிடம் மூவாயிரம் பொன் கடன்வாங்கிக் கொடுத்தனன். சாபலன் கடுவட்டி வாங்குகிற கொடியவனுனமையினுல், வட்டியின்றிப் பணங்கொடுத்துதவும் அநந்தன்மீது நிறைந்த அழுக்காறுடையவனு யிருந்தான். அநந்தன் மூவா

யிரம்பொன் கடன்கேட்டதும், தருணம்வாய்த்ததென்று தன்னுள்ளே நினைத்து மகிழ்ந்த சாபலன் புறத்தே நகைமுகங் காட்டிப் பொன்னைக் கொடுத்துவிட்டு, மூன்றுமாதத்துக்குள் திருப்பிக்கொடுக்காவிட்டால் அநந்தனுடைய உடலிலிருந்து நாற்பதுரூபா எடையளவாகிய இறைச்சியை வெட்டிக்கொள்வதற்குத் தனக்கு உரிமையுண்டென்று ஒரு சீட்டெழுதுவித்துக்கொண்டான். மூன்றுமாதத்திற்குள் தன்னுடைய கப்பல்கள் வந்துவிடுவனவென் றெண்ணிய அநந்தன் சீட்டுக்குக் கைச்சாத்திட்டான். கப்பல்கள் வரவில்லை. சாபலன் நீதிமன்றுக்குப் போய் வழக்குத் தொடுத்தான்; வாசவன் ஆறுயிரம்பொன் கொடுப்பதாகக் கூறியும் சாபலன் ஒருப்படாது சீட்டில் விதித்தபடி இறைச்சியே வேண்டுமென்றுநின்றான். வாசவனுக்கு மனைவியாகிய விஜயைநாயகனும் பிறரு மறியாதவண்ணம் நியாயதுரந்தரவேடத்தோடு வந்து மன்றிலிருந்தோருக்குச் சட்டத்தையெடுத்துக்காட்டி அநந்தனைக் காப்பாற்றிச் சாபலனைத் தோல்வியடையப்பண்ணுகிறாள். இதுவே கதையின் சுருக்கம். மேற்குறிப்பிட்ட நாடகபாத்திரரோடு வணியதேயத்து மன்னன், விஜயையைப்பெறவிரும்பிய குறும்பொறைநாடன், கானகநாடன் என்னும் குறுநிலமன்ன ரிருவர், அநந்த வாசவருக்கு நண்பராகிய கருணாகரன் சலசலோசனன் சாரகுமார னென்னும் மூவர், சாபலனது நண்பனாகிய தூவல னென்னுங் கோமுட்டிச்செட்டி, சாபலனது வேலைக்காரனாகிய அகிஞ்சன னென்னும் விதூஷகன், அகிஞ்சனன் தந்தையாகிய விருத்தன், விஜயையினது தோழியாகிய அங்கனை, சாபலன் புதல்வியாகிய பதுமை, பதுமைமேற் காதல்கொண்ட புட்கலன், வேலைக்காரர் என்றின்னோர் இந்நாடகத்தினுட் டோற்றுவர். இனி, நாடகத்தி னமைப்பைக் காட்டுவாம்.

[அங்கங்களை I, II, III, IV, V என்னும் இலக்கங்களாலும், அங்கத்தின் உட்பிரிவுகளாகிய காட்சிகளை 1, 2, என்றித்தகைய இலக்கங்களாலும் குறியீடுசெய்வாம். உதாரணமாக, "II 3". இரண்டாம் அங்கத்தின் மூன்றாவது காட்சி என்பதைக் குறிக்கும்].

I. 1. நாடகபாத்திரர்: அநந்தன், சலசலோசனன், சாரகுமாரன், வாசவன், புட்கலன், கருணாகரன்.

நிகழ்ச்சி: அநந்தன் மனச்சோர்வுற்றுத் தனது சோகத்துக்குக் காரண மெதுவென நண்பர்கள் விசாரித்துக்கொண்டிருப்பதும் வாசவன்

வந்து தான் மணலிக்குப் போக நினைத்திருக்கும் எண்ணத்தைக் கூறி மூவாயிரம்பொன் கடன் கேட்பதும்.

I. 2. நா. பா. விஜயை, அங்கனை.

நி. விஜயை தன்னை நாடிவந்து துன்புற்றுப்போன அரசிளங்குமாரையும் பிறரையும்பற்றித் தோழியோடு வார்த்தையாடுதல்.

I. 3. நா. பா. அநந்தன், வாசவன், சாபலன்:

நி: சீட்டுக் கொடுத்து மூவாயிரம்பொன் கடன்வாங்குதல்.

II. 1. நா. பா.: குறும்பொறைநாடன், விஜயை, அங்கனை, பரிசனர்.

நி.: விஜயை தன்னைவிரும்பிவந்த குறும்பொறைநாடனைநோக்கி, "மன்ன! இப்பேழைகளுள் ஒன்றிலென் னுருவமுண்டு அதனை நீர் தெரிந்தெடுப்பீராயின் நான் உமக்கு மனைவியாகவேண்டும், தெரிந்தெடுக்கத் தவறுவீராயின் பேழையின் மர்மத்தைப் பிறருக்குத் தெரிவியாதிருப்பதோடு நீர் சீவியகாலம் முழுதும் பிரமசாரியா யிருக்க வேண்டும்; இது என் தந்தையின்கட்டளை; இதற்கு உடம்படுவீராயின் கோயிலிற் சென்று சத்தியஞ்செய்து வருவீர்; பேழையிருக்குமிடத்துக்கு நும்மை யழைத்துச்செல்வேன்" என்று கூறுதல்; குறும்பொறைநாடன் உடன்பட்டுச் சத்தியஞ்செய்யப்போதல்.

II. 2. நா. பா.: அகிஞ்சனன், விருத்தன், வாசவன், கருணாகரன்.

நி.: அகிஞ்சனன் சாபலனுடைய சேவகத்தை விட்டு ஓட நினைத்து வீதியிற் செல்லும்போது தனது தந்தையாகிய விருத்தனைக் கண்டு அவனையும் அழைத்துச் சென்று வாசவனிடத்துச் சேவகனாக அமர்தல்.

[விருத்தனாகிய தந்தை கண்ணொளி யிழந்திருந்தமையினால் ஒன்றினையொன்றாக மாற்றிச்சொல்லி அவனோடு பலவாறாக வார்த்தையாடும் அகிஞ்சனனுடைய கூற்றுக்கள் நகைச்சுவை நிரம்பியன.]

II. 3. நா. பா.: பதுமை, அகிஞ்சனன்,

நி.: அகிஞ்சனன் பதுமையிடம் விடைபெறச் செல்லுதல்; அவள் புட்கலனிடங் கொடுத்துவிடும்படி அகிஞ்சனன்கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தல்.

II. 4. நா. பா.: கருணாகரன், புட்கலன், சலசலோசனன், சாரகுமாரன், அகிஞ்சனன்.

நி.: அகிஞ்சனன் பதுமையினது நிருபத்தைப் புட்கலனிடங் கொடுத்தல். பதுமை ஆண்பிள்ளைவேடத்தோடு தந்தைவீட்டைவிட்டுத் தன்னோடு உடன்வருவதற் கிசைந்திருப்பதைப் புட்கலன் தனது நண்பருக்குத் தெரிவித்தல்.

II. 5. நா. பா.: சாபலன், அகிஞ்சனன், பதுமை.

நி.: சாபலன் தான் புறத்தே விருந்துண்ணப் போவதாகவும் வீட்டினைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படியும் பதுமைக்குச் சொல்லுதல்.

II. 6. நா. பா.: கருணாகரன், சாரகுமாரன், புட்கலன், பதுமை.

நி.: புட்கலன் பதுமையை யுடன்கொண்டேகல்.

[பின் அநந்தன் வந்து கருணாகரனைக் கண்டு வாசவனோடு மணவிக்குப் போகும்படி அனுப்புதல்.]

II. 7. நா. பா.: விஜயை, குறும்பொறைநாடன், பரிசனர்.

நி.: குறும்பொறைநாடன் பொற்பேழையைத் திறந்து அதனுள் ஒரு தலையோடும் ஒரு பத்திரமு மிருக்கக்கண்டு பத்திரத்தைப் படித்தல்.

அப் பத்திரத்தில்,

"மின்னுவ வெல்லாம் பொன்னா காவெனு
நன்மொழி பன்முறை நவிலக் கேட்டனை
யென்மேற் புறத்தி னெழிலினை நோக்கி
யின்னுயி ரீந்தோ ரியம்பிடிற் பலரே
பிணம்பொதி தாழி யரும்பொன தெனினு
நிணங்கொளும் புழுவுண் ணிறைதலு மியல்பே

"ஆண்மையொ டறிவு கேண்மையுற் றிருப்பின்
விடைபெறு திவணீ மேவுதல் சாலும்
இளையோய் மதியின் முதியையு மல்லை
களைக ணுற்றநின் காதலும் வறிதே
போதி யென்னப் புகல்வதென் கடனே."

என் றெழுதியிருப்பதைக் கண்டு குறும்பொறைநாடன் மனத்துயருற்றுப் போய்விடுதல்.

II. 8. நா. பா.: சலசலோசனன், சாரகுமாரன்.

நி.: பதுமை வீட்டைவிட்டோடியபின்பு சாபலன் வந்து தன் மகள் பொன் முடிப்புகள் பலவற்றைக் கொண்டு புட்கலனோடு ஓடிவிட்டாள் என்பதை யறிந்து துயருற்றசெய்தியைச் சலசலோசனன் சாரகுமாரனுக்கு அறிவித்தல்.

II. 9. நா. பா.: விஜயை, அங்கனை, கானகநாடன், ஒரு தூதுவன்.

நி.: கானகநாடன் பேழைகள் மூன்றினையும் பார்வையிடல். பொற்பேழையின்மேல், "என்னைத் தெரிந்தோர் பலரும் விரும்புவதைப் பெறுவார்" எனவும், வெள்ளிப் பேழையின்மேல், "என்னைத்தெரிந்தோர் தமது தகுதிக்கேற்றதைப் பெறுவார்," எனவும், ஈயப்பேழையின்மேல், "என்னைத் தெரிந்தோர் தமக்கென்றிருக்கும் பொருளனைத்தினையும் ஈந்திழப்பார்" எனவும் எழுதப்பட்டிருப்பதைக் கண்ட கானகநாடன் வெள்ளிப்பேழையைத் திறக்கிறான். அதனுள்ளே மூடன்தலை யெழுதப்பட்ட ஒரு சித்திரம் இருக்கக்கண்ட கானகநாடன் இதுதானோ என் தகுதிக் கேற்றதெனக் கூறி யவலித்து ஆங்கிருந்த ஒரு பத்திரத்தை யெடுத்துப் படிக்கிறான்.

ஆங்கு,

"எழுமுறை யெரியிதன் றிண்மை சோதித்த
தெழுமுறை யாய்ந்தோர் பிழைபட விலரே
விழைபொருள் நிழலெனி னுவகையு மதுவே
நிழலினை யணையு நீர்மைய ருளரே
வெள்ளிப் பூச்சொடு விளங்கிய மூடர்
உள்ளூர் காணிங் குள்ளது மதுவே

மெல்லணை மேலெம் மெல்லிய லுறினும்
நல்லோய் நானின் றிலையா குவனே
ஆதலின் விரைந்து போதனின் கடனே."

என எழுதப்பட்டிருப்பதைப் படித்துக் கானகநாடன் போய்விடுகிறான்.

III. 1. நா. பா.: சலசலோசனன், சாரகுமாரன், சாபலன், தூவலன்.

நி.: அநந்தனுடைய கப்பல் வந்துசேரவில்லை யென்னும் செய்தி யெங்கும் பரவுகின்றது. அநந்தன்மேற் பழிவாங்கலா மென்னு மெண்ணத்தினாற் சந்தோஷமும் மகள் பொன்முடிப்போடு ஓடிவிட்டாளென்னு மெண்ணத்தினாற் அன்பமு முற்ற சாபலன் ஈற்றிற் சந்தோஷத்தோடு அகலுகிறான்.

III. 2. நா. பா.: வாசவன், கருணாகரன், விஜயை, அங்கனை, புட்கலன், பதுமை, சலசலோசனன், பரிசனர்.

நி.: வாசவன் பலமுறை ஆராய்ந்து நோக்கி ஈயப்பேழையைத் திறந்து, அதனுள்ளே விஜயையின் சாய லெழுதிய சித்திர மிருக்கக் கண்டு,

"யாதிங் குள்ளதென் னிறைகவ ரணங்களுள் விஜயை
மாதின் சாயலோ வாள்விழி யசைந்தன மலர்ந்த
போது போன்றன மெல்லித ழுளம்பிணித் திடுமோர்
சூதின் சூழ்ச்சியே சுரிகுழல் சொல்லவே றுளதோ"

எனக் கூறிப் பேழையினுள் மீட்டும் பார்க்கும்போது ஒரு பத்திர மிருக்கக்கண் டெடுத்து அதனைப் படிக்கிறான்.

அப்பத்திரத்தில்,

"மையல்தீர் காட்சியை யாதலி னைய
பொய்யா நீர்மை பொருந்தப் பெற்றனை
பிறிதுவிழை யாதிப் பெரும்பொருள் பேணும்
உறுதியை யாயினிற் குரியா டன்னைக்
கைப்பிடித் தென்றுங் காத்தனின் கடனே"

என எழுதியிருப்பதைப் படித்து விஜயையினுடைய கையைப் பற்றி மகிழ்ச்சியடைகிறான். கருணாகரன் அங்கனையை மனைவியாகப் பெறுகி

ருன். இத்தருணத்திற் சலசலோசனன் அநந்தன் கொடுத்த ஒரு நிருபத்தை வாசவன்கையிற் கொடுக்க அதன்மூலமாக வாசவன் தன் நண்பன் அநந்தனுக்கு விளைந்திருக்கிற துன்பத்தை யுணர்ந்து விரைந்து புறப்பட்டு வணிகதேயத்துக்குப் போகிருன்.

III. 3. நா. பா. சாபலன், சாரகுமாரன், அநந்தன், சிறைச்சாலைத்தலைவன்.

நி.: சாபலன் சிறைச்சாலைத்தலைவனிடம் அநந்தனை யொப்புவித்தல்.

III. 4. நா. பா.: விஜயை, அங்கனை, புட்கலன், பதுமை, வேலைக்காரன்.

நி.: விஜயை புட்கலனையும் பதுமையையும் வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுத் தனது அத்தை மகனுகிய ஒரு நியாயதுரந்தரனுடைய ஆலோசனைப்படி அந்த நியாயதுரந்தரனுடைய உடைகளை யணிந்துகொண்டு, தோழியாகிய அங்கனை எழுத்தாளனுடை யணிந்துகொண்டு உடன்வர வணிகதேயத்துக்குப் போதல்.

III. 5. நா. பா.: அகிஞ்சனன், பதுமை, புட்கலன்.

நி.: உவகைக்குறிப்பு நகைக்குறிப்புத் தோன்ற உரையாடுதல்.

IV. 1. வணிகதேயத்து நீதிமன்றம்.

நா. பா.: வணிகதேயத்துமன்னன், சாபலன், அநந்தன், வாசவன், கருணுகரன், சலசலோசனன், சாரகுமாரன், நியாயதுரந்தரவேடம் பூண்ட விஜயை, அங்கனை, மன்றத்திருந்த பிறர்.

நி.: சீட்டினின்று அசையமாட்டேன் என்ற கோமுட்டிச்செட்டியாகிய சாபலனை நோக்கி விஜயை அன்பின்பாலதாகிய இரக்கத்தின் உயர்வை யெடுத்துக் கூறுதல்,—

"வன்பொறை மருவா மரபின தாகி
வானின் றிழியும் மழைத்துளி போலக்
கொடுப்போ ரெடுப்போ ரெனுமிரு வோரையும்
அடுத்துக் காப்ப தன்புசா ரிரக்கம்
வலிதினும் வலிதிது மணிமுடி சூடி

யுலகு புரக்கு முரவோற் குரைப்பின்
இலகொளி முடியினு மிரக்கம் பெரிதே
அங்கையிற் பொருந்தி யச்சம் விளக்குஞ்
செங்கோல் புறத்தது சிந்தைய திரக்கம்
மன்னவர் மனமெனு மணியணி பீடத்
தாசுவீற் றிருக்கு முரைசா லன்பு
தேவ தேவன் றிருக்குணத் தொன்றே
நீதியொ டன்பு நிலைபெறி னீதி
ஆதியங் கடவு ளருளென நிலவும்
இறைபே ரருளிங் கெமக்கிலை யாயின்
நெறியின் றியாரோ நீடுவாழ் வெய்துநர்
அருளினை விழைந்தே மருட்செயல் புரிதன்
மரபே யாக மதித்தலுங் கடனே"

எனப் பலவாறுகக் கூறியும் சாபலன் சீட்டினின்று அணுவளவேனும் விலகமாட்டேனெனச் சாதித்துநின்றனன்.

விஜயை : சாபலா ! சீட்டின்படி அதோ நிற்கும் வணிகனுடைய இறைச்சியில் நாற்பதுரூபா எடை யுனக்குரியது. சட்டம் உனக்கு அதை யளிக்கிறது : நீதியும் அதுவேயாகும்.

சாபலன் : ஆ! நேர்மையுள்ள நீதிபதியே!

விஜயை : சொல்லப்பட்ட நாற்பதுரூபா எடை இறைச்சியை நீ இவ் வணிகனுடைய மார்பிலிருந்து வெட்டிக்கொள்ளலாம் ; இதற்குச் சட்டம் இடங்கொடுக்கிறது; மன்றத்தாரும் இதனை நீதி யெனக் கொள்கின்றனர்.

சாபலன் : கல்வியில்வல்ல நீதிபதியே! தீர்ப்புச்சொல்லிவிடுக.

விஜயை : பொறு, பொறு, சாபலா! அவசரப்படாதே; இறைச்சி யுனக் குரியதென்று இச்சீட்டுச் சொல்லுகிறது. அவ்விறைச்சியை வெட்டும்போது ஒரு துளி யிரத்தஞ் சிந்தினும் அல்லது குறிக் கப்பட்ட எடையினின்று ஒரு அணுவளவேனும் ஏறக்குறைய வெட்டினும், நீ நின்உயிரையும் பொருள்முழுவதையும் இழந்து விடவேண்டும், இதுவே இந்நாட்டுச் சட்டம்.

சாபலன்: நான் வழக்கை விட்டுவிடுகிறேன்; என் முதலைத் தந்து என்னைப் போகவிடுங்கள்.

வாசவன்: இதோ எடுத்துக்கொள்.

விஜயை: மன்றத்தின்முன்னிலையிற் பொன் வேண்டாமென்றனை; சட்டப்படியுள்ள நீதியே யுனக்குரியது. ஒரு மனிதனுடைய உயிரைக் கவரநினைந்தாயாதலினால் உன்னைக் கொலைக்களத்துக்கு அனுப்புவதற்கு இந்நாட்டு மன்னருக் குரிமையுண்டு. உனது பொருளிற் பாதி யரசபொக்கிஷத்துக்குப்போகும். மற்றொருபாதி நீ யெவனது உயிரைக் கவரநினைத்தாயோ அவனுக்குரியது.

[அரசன் சாபலனுயிரை மன்னித்து ஒருதொகைப் பணத்தை இராஜபொக்கிஷத்துக்குக் கொடுக்கும்படி தண்டனை விதிக்கிறான். அநந்தன் தனக்கென்று மன்றத்தார் விதித்த பாகத்தைப் புட்கலனுக்கும் பதுமைக்குங் கொடுக்கும்படி சொல்லுகிறான். அரசன் வாசவனையும் அநந்தனையும்நோக்கிச் சட்டமுறையை எடுத்துக்காட்டி அநந்தனுயிரைத் தப்புவித்த நியாயதுரந்தரனுக்குத் தக்க பரிசில்கொடுக்கும்படி சொல்லுகிறான். நியாயதுரந்தரனாகிய விஜயை வாசவன் கைக் கணையாழியைத் தரும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிறாள்.]

IV. 2. நா. பா.: விஜயை, அங்கனை, கருணாகரன்.

நி.: எழுத்தாளன் வேடத்தோடுநின்ற அங்கனை, கருணாகரனுடைய கைவிரலி லணிந்திருந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறாள்.

V. 1. நா. பா. பதுமை, புட்கலன், அகிஞ்சனன், அங்கனை, கருணாகரன், வாசவன், அநந்தன், விஜயை.

நி.: பதுமையும் புட்கலனும் சந்திரனுடைய தண்ணிய கிரணங்கள் பரம்பிய உய்யானத்தினுள்ளிருந்து வார்த்தையாடிக்கொண்டிருக்

கும்போது அகிஞ்சனன்வந்து விஜயையும் அங்கனையும் வருவதாகக் கூறுகிறான். அன்னாரிருவரும் வந்து சிறிதுநேரத்துக்குள் அநந்தனும் வாசவனும் கருணாகானும் வருகின்றனர். அங்கனை, கருணாகானை நோக்கி மணநாளிலே தான் கொடுத்த மோதிர மெங்கேயென்று விசாரித்தாள்; அவன் எழுத்தாளனுக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்லுகிறான்; அவள் புலவியால் வாடியதுபோலபிநயித்து இதோ இந்த மோதிரத்தை வைத்திரும் என்று கொடுக்கிறாள். விஜயையும் தான் கொடுத்த கணையாழியை விசாரித்துப் பின்பு கொடுக்க நியாயதுரந்தரனாக வந்தது விஜயையே யென்பதை அவள்து நாயகனும் நண்பரும் அறிகின்றனர். இவ்வளவோடு நாடகம் முடிகின்றது.

இந்நாடகத்தினுள், "அநந்த சாபல சரிதம்," "விஜயை வாசவ சரிதம்," "பதுமை புட்கல சரிதம்," என ஒன்றினொடொன்று தொடர்புடைய மூன்று சரிதங்கள் ஒருங்கு பிணைந்திருக்கின்ற தன்மையை நோக்குக.

அநந்த சாபல சரிதம் I 1, 3, II, 2, 8, III, 1, 2, 3, 4, IV 1, ஆகிய உட்பிரிவுகளினுட் கூறப்பட்டது; விஜயை வாசவ சரிதம் I 2, II 1, 2, 7, 9, III 2, 4, IV 1, 2, V 1, ஆகிய உட்பிரிவுகளினுட் கூறப்பட்டது; பதுமை புட்கலசரிதம் II 3, 4, 5, 6, 8, III 1, 4, 5, IV 1, V 1, ஆகிய உட்பிரிவுகளினுட் கூறப்பட்டது. பெருமிதச் சுவையின்பாலதாகிய யூலியசீசர்சரிதையின் கதைச்சுருக்கத்தைத் தந்த பின்பு பெருமிதச் சுவையினியல்பை விளக்குவாம்.

[தொடரும்]

விபுலாநந்தர்.

ஸ்ரீ:

# புரூரவசரிதை.

(௪உஎ-ம் பக்கத் தொடர்ச்சி.)

## காந்திமதி கலியாணப்படலம்.

மருக்கண்டேழிசைவரியளியுழுமுழுமலரோன்
முருக்குஞ்செந்தழற்கண்ணுதற்கடவுளைமுன்னி
யிருக்குந்தேடருமெம்பிரானின்னிருகருணைத்
திருக்கண்கண்டவர்தீவினைகாண்பதுமுண்டோ. (௧)

ஆகையாற்றிரையாழியோரைந்தையுங்கடத்தி
மாகமீதுயர்மணிமதிற்றிரிகர்த்தனளித்த
தோகைதன்னையத்தாதைகைந்நீரொடுந்தூய
வாகைவேலினன்பெறவருள்புரியெனவழங்க. (௨)

வேண்டுகின்றதேயிதுவெனவிண்ணவர்விளம்பப்
பாண்டரங்கனுநன்றெனமகிழ்ந்துமுன்பணிந்த
வாண்டகைத்திறன்மன்னையுமன்னவடனையு
நீண்டசெம்மணிமானமேவுதிரெனநிகழ்த்த. (௩)

விடையுமன்னமுங்கலுழனும்வேழமும்விரைவி
னடவுகின்றனர்நாகநாட்டவர்புடைநண்ண
மடலவிழ்ந்தபூங்குழலியுமத்திரகோவு
மிடையினின்றவரிடையினில்மகிழ்வொடேகினரால். (௪)

ஒருபெரும்பொருளாகியமூவர்களுடனே
தருநிரந்தநாட்டவரெலாம்போதுறுந்தன்மை
பொருவருந்திறற்றிரிகர்த்தமன்னெடும்புகல
வருமையுற்றிடுமேழிசையாழ்முனியடைந்தான். (௫)

அடைந்தமாமுனிதன்னெதிர்மன்னவனடைந்து
நடந்தபாதகமலர்மிசைநறுமலர்சூட்டிப்
படர்ந்தவன்பொடுபணிந்துநீயென்னுழைப்படரக்
கிடந்தமாதவமுண்டுகொல்பண்டெனக்கிளக்க. (௬)

அவ்வியத்தொடுநின்றனையுடலமுமல்கி
நோவ்வுயிர்த்தனையென்னைகொல்புகலெனநுவலச்
செவ்வியற்றசன்மகண்மணந்திறம்பியசெயலைத்
துவ்வயிற்கதிரவேலினன்சொலமுனிசொல்லும். (௭)

மன்னகேட்டியான்வானவரவையினின்மன்ன
முன்னவன்புவியற்புதமென்னெனமொழிய
நின்னதாகியபுதல்விதன்மணவினைநினைவை
யுன்னியோதிடப்பிரமனைப்பரன்வினவுதலும். (அ)

விதிவலத்தினைத்தெரிதுமோவென்றனன்விரிஞ்சன்
மதியினும்பெரியதுகொலோவிதியெனமாயோன்
எதிர்மறுத்தனனவ்வயின்யானந்தவேழை
கதிர்முலைப்பயன்பெறுபவனெவனெனக்கழற. (௯)

மருகரென்பவரிருவருமலவிதிவலத்தா
லொருகரம்பதமொருங்குநீத்தவன்றுயருழந்து
பெரியசெக்கடியிடக்குமப்பங்குவிப்பேதைக்
குரியநன்மணம்பெறுபவனெனவுலகளந்தோன். (௧௦)

பறவைவேந்தனுற்கிரவுஞ்சப்பருப்பதத்துய்ப்பக்
குறையுடற்பொறைகொண்டவனவன்முகநோக்கி
யிறவுகண்டிலைபசிப்பிணிதீர்ப்பதாரென்ன
வறவுநொந்திடேலமுதருத்துவனெனவகல. (௧௧)

மருங்குகண்டனனுன்திருமனைவியுன்மகளை
யருங்கலன்களோடொருமணிப்பெட்டகத்தாக்கித்
தெரிந்திடாதுதன்மருகனுக்கனுப்பலுஞ்சிறையால்
விரிந்தவான்செல்வோனெடுத்தனன்வெற்பகத்துய்ப்ப. (௧௨)

பங்கமுற்றவன்பெட்டகந்திறத்தலும்பதும
மங்கைபோன்றவம்மங்கையுமவன்மணிப்புயத்திற்
செங்கையான்மலர்மாலிகைசூட்டியேசிறந்தா
ளங்கணெய்தினரரன்முதலமரர்யாவர்களும். (௧௩)

குறைந்தசெங்கையும்பாதமும்வரங்களுங்கொடுத்துச்
சிறந்தமானமேலேற்றினரவர்களுந்திரிந்தார்
அறிந்துநீயெதிர்போய்க்கொணர்ந்தணிமணவினையை
நிறைந்தவன்பொடுசெய்கென்றுபின்னருநிகழ்த்தும். (௧௪)

மன்றுளாடியுமறைமுதற்கிழவனுமாலு
மின்றுநின்னுழையெய்திடப்பெற்றனையென்னில்
நின்றுணைத்தவர்யாரெனநிகழ்த்தியவ்வேந்தன்
பொன்றழைத்ததார்ப்புரூரவாவென்றனன்போனான். (௧௫)

அனையவர்மொழிகேட்டலுமகிழ்ச்சியோடகன்ற
மனநடுங்கினன்மெய்யெலாநோக்கிவாய்புலர்ந்தான்

வினய்மென்னினிவிண்ணவர்க்காகவேண்டுதுமென்
றினையலின்றியேயெதிர்கொடுசெல்லவாங்கெழுந்தான். (௧௬)

எழுந்தகாலையிற்கண்டனனண்டர்கள்யாருஞ்
செழுந்துழாய்முகின்முதலியமூவராந்தேவுங்
கொழுந்துவாமதிநுதலியுமத்திரகோவும்
விழுந்தவன்பொடுவிண்ணிடைதோற்றியவியப்பை. (௧௭)

கண்டுகண்டெழுந்தாடினன்பாடினன்களித்தான்
மண்டலந்தனில்வீழ்ந்தனன்சூழ்ந்தனன்வணங்கித்
தொண்டனேன்புரிதவப்பயனீதெனத்தொழுதான்
கண்டலங்களாலாநந்தவாரிதிகால. (௧௮)

புவனமீதுறவணங்கியமன்னனைப்புலவோர்
இவனைநேர்பவனெவனெனத்தத்தமிலிசைத்தே
தவனனுமெனவிளங்கியபுரூரவாதனையு
மவனன்மாதையுமானமோட்டவனியிலாக்கி. (௧௯)

அந்தரத்திடைநின்றனர்மன்னனீயளித்த
சந்திரத்திருநுதலியைமறைமுறைச்சடங்கா
லிந்தவேந்தனுக்கீந்தருள்புரிதியின்றென்னச்
சிந்தைகூர்ந்துரைசெய்தனர்காணருஞ்செயலோர். (௨௦)

வேறு.

விண்மானநின்றுமிழிநின்றமன்னன்விரைமேவுபாதமலரிற்
கண்மாரிசிந்தவிழுவானெழுந்துதொழுவாணிணைந்துகலுழ்வான்
எண்ணுதிழைத்தபிழைசீபொறுத்தியெனநொந்துசிந்தையினைவான்
மண்ணுள்சிறப்பின்வினையென்னையென்னைமதிகேடுசெய்ததெனவே. (௨௧)

ஓராழிமன்னவுலகேழினுக்குமொருகோனடத்துமுரவோய்
பாராளுமன்னர்முடிமேலிருந்தபதபங்கயங்களுடையாய்
ஆராய்வதின்றியுனையின்னல்கண்டதமியேனிருப்பதறனோ
தீராவுடம்பினுயிர்தீர்வனென்றுசெயலொன்றுமின்றியயர்வான். (௨௨)

நையாதவுள்ளநலிவெய்தவெய்தினலிவித்தபாவிகுறையை
யையாபொறுத்தியரசேபொறுத்தியெனநொந்துதாழுமவனைக்
கையாலெடுத்துளருள்கூரமார்பினிடைபுல்லிநின்றுகமலச்
செய்யாண்மணந்தபுயனஞ்சலென்றுதிருவாய்மலர்ந்தபொழுதே. (௨௩)

தன்மாதெழுந்துதனையேவணங்கமகிழ்வெய்திநின்றுதழுவிப்
பின்மாதர்வெள்ளமொடுசேனைவெள்ளமளவின்றிவந்துபெருகத்
தொன்மாதருக்களுறைவோர்கண்மேனிபுளகங்களோடுதொடரப்
பொன்மானமானமணமண்டபத்தினிடைவந்திருந்தபொழுதே. (௨௪)

## வேறு.

அற்றைமுற்பகலம்பொன்னகரென
வுற்றமைத்தவுறைவிடமேவிய
கொற்றமன்னவர்யாருங்குழுமினர்
சுற்றுமாக்கடறொக்கனவென்னவே. (௨௫)

குந்தளங்குகுதம்மகதங்குருச்
சிந்துமாகதங்கேகயஞ்சேகுண
முந்துதெண்டிரைச்சீனமொடேயசு
மந்தம்வாரணஞ்சோழமராடமே. (௨௬)

குச்சரம்பப்பரங்குசராட்டமோ
டச்சைகாம்பிலியைகையவந்திசீள்
மச்சமத்திரம்வத்தவங்கோசலம்
விச்சைவஞ்சிமிதிலைவிராடமே. (௨௭)

கடகம்வங்கம்வங்காளந்தெலுங்கமேற்
குடகமாளவஞ்சோனகங்கொங்கணம்
வடகலிங்கங்குலிங்கமகதம்வாய்ந்
திடமியன்றகாம்போசமியாதவம். (௨௮)

சூரசேனந்துருக்கங்கவுடஞ்சை
வீரஞ்சிங்களம்வங்கமிலேச்சங்காந்
தாரம்பல்லவமாளவமங்கமொண்
கீரஞ்சேர்தமிழ்ப்பாண்டிதென்கேரளம். (௨௯)

ஓலவால்வளையூர்புனன்மல்குபாஞ்
சாலமோடுகல்யாணிமுதற்றனி
ஞாலமீதிலெண்ணேழெனுநாட்டின்வாழ்
மேலதாந்திறல்வேந்தர்தம்வேந்தரே. (௩௦)

வேழமேவினர்வெம்பரிமேவினர்
ஈழமேவுமிரதமுமேவினர்
ஆழமேவுமகன்புனனாட்டவர்
சூழமேவினர்தொன்னெறிமேவினார். (௩௧)

முன்பிலக்கமுதலெழுதீவினோ
ரன்பிலக்கமளையவர்தம்மொடு
பின்பிலக்கமில்லாதபெருந்திறல்
வன்பிலக்கவைநாவருமன்னினார். (௩௨)

சித்தர்சாரணர்தேனிசைக்கின்னரர்
முத்தானமுனிவரியக்கர்கள்
வித்தகக்கிம்புருடர்கள்விஞ்சையர்
பத்திரக்கருடேசரும்பாங்குற்றூர். (௩௩)

பேதையேமுதற்பேரிளம்பெண்வரை
யோதுமாதருமொண்டிறன்மைந்தரும்
வீதிதோறுமிடைந்தனர்வேதிய
ராதியானவருணத்தவருமே. (௩௪)

விண்ணிறைந்தனர்விண்ணகவேந்தர்கள்
மண்ணிறைந்தனர்மண்ணகமன்னவ
ரெண்ணிறைந்தவுவகையினீர்ங்கையி
லெண்ணிறைந்தனவென்னநிறைந்தனர். (௩௫)

சுற்றுசீரையர்சூழ்சடைவேணியர்
பெற்றகுண்டிகைதண்டுபிடித்துளார்
முற்றுணர்ந்தமுனிவர்குழாத்தொடு
முற்றகோதமனெய்யெனவெய்தினன். (௩௬)

வந்தமாமுனிபாதம்வணங்கிய
வந்தமன்னனையம்முனிநோக்கியே
யிந்துவாணுதற்கேன்றனவாகிய
முந்துமோரைமுடுகியதென்றலும். (௩௭)

என்னும்வேலையில்வேந்தனுமேந்துபூப்
பின்னும்வார்குழற்பேதையர்தம்மொடு
முன்னியோதிடவொண்ணுதலாரெழிற்
கன்னிமேனியைப்பின்னுங்கவின்செய்தார். (௩௮)

அவ்வணங்கையமராணங்கினே
டெவ்வணங்குமணங்கினைடேமுறக்
கைவணங்கவின்செய்துகணெச்சில்தீர்த்
திவ்வணந்திறல்வேந்தற்கியற்றினர். (௩௯)

பாவுதெய்வப்பகீரதியாதியாம்
விரவுநீரில்விரைவொடுவேதமந்
திரமும்பூரித்தசெம்பொற்றசும்புணீர்
வரைசெய்மார்பற்குமஞ்சனமாட்டினர். (௪0)

பாரைநீங்கியும்பாலரைநீங்கியுந்
தாரநீங்கியுஞ்சார்பிடநீங்கியும்
வாரநீங்கியமன்னுயிர்கட்கெலா
மீரநீங்கலாற்கீரமுனீக்கியே. (௪௧)

நாத்தழும்புறநாற்கவிநாவல
ரேத்தெடுத்தவிசைப்பொருளென்னவும்
வாய்த்தநல்லறம்வந்துகவசமாய்க்
காத்தபோன்றுங்கலவைமெய்சேர்த்தியே. (௪௨)

பார்த்தகண்களின்பாயொளியாய்நிறம்
பேர்த்திலங்குபெருவிலைவெண்டுகில்
மீத்தசந்திரன்பேர்ன்மெலிவறக்
காத்தபோன்றுங்கலவைமெய்சேர்த்தியே. (௪௩)

வேறு.

குற்றநீங்கருச்சுனக்கோடிமீதினிற்
பொற்றவான்கச்சணிபொருந்தவீக்கினர்
மற்றிமஞ்சுற்றியமேருமாதிரத்
துற்றசாம்பூநதமொழுகிச்சூழ்ந்தபோல். (௪௪)

விற்றவழ்வயிரமும்விரிந்தசெம்மணி
யற்றமில்லனவுமோட்டாணியோடுறத்
தெற்றுநூற்பட்டிகைதெவ்வராருயிர்
பற்றுறுகண்ணிபோன்மருங்கிற்பற்றவே. (௪௫)

வாளமைத்திறனுயர்மன்னர்மாமுடித்
தூளமைத்திடமிளிர்தொய்படாக்களங்
காளம்வைத்தவன்றருங்கமலதாட்கடை
யாளம்வைத்தெனக்கழலாலவீக்கியே. (௪௬)

பத்திசெய்நவமணிபதித்தவாரமு
முத்தணியாரமும்மொய்ம்பிற்சேர்த்தினர்
கொத்துறுநாளொடுகோளுமோர்பகற்
றொத்தியகனகமால்வரையிற்றோன்றவே. (௪௭)

பைந்தளிர்மரகதம்பதித்ததோள்வலை
யந்தடப்புயங்களுக்கமையச்சேர்த்தினர்
மைந்தனேவந்தனைபோலுமாலெனத்
தந்தையர்தோளுறத்தழீக்கொண்டென்னவே. (௪௮)

பலமணியாரமார்பரிதிமார்பினிற்
புலனிறமுப்புரிநூல்புணர்த்தனர்
நிலமகள்பங்கிதுநின்றபாதியு
மலர்மகள்பங்கெனவரம்புவைத்தபோல். (௪௯)

வாகைவேல்தாங்குசெம்மலர்க்கைமீதினிற்
சேகறுமாழியுந்தொடியுஞ்சேர்த்தினு
ரோகையாயாவர்க்குமுதவுவோன்கரம்
மேகமென்குறியினுன்மின்னுஞ்சூழ்ந்தென. (௫0)

மின்னெறிவயிரவாள்வேந்தன்காதினிற்
பொன்னெறிமணிக்குழைபொலியப்பூட்டினர்
செந்நெறியாவையுந்திரண்டுசேக்கைக்கோர்
நன்னெறியிதுவெனநணுகுற்றென்னவே. (௫௧)

குதைவரிச்சிலைநந்தற்கொவ்வைவாய்ச்சியர்
மதர்விழிவண்டெலாம்வந்துமொய்த்திடப்
புதுமணிக்குவடெனும்புயத்திற்பூந்துகட்
டதையிதழ்ச்செழுமலர்த்தாமஞ்சூட்டியே. (௫௨)

வென்னுடைவாளுறவேளைவென்றகட்
கொன்னுடைவாளினுரவாவிற்கூர்மைய
தென்னுடைவாளெனவிரவியேமுறத்
தன்னுடைவாளொருமருங்கிற்சாத்தியே. (௫௩)

கதந்தருங்குணமெலாங்கடிந்துஞானமா
னதந்தருங்குரவர்தாள்பணிந்துநால்வகை
விதந்தரும்பிறவிகள்வீடவீடெனும்
பதந்தரும்பண்ணவன்பதம்பராவியே. (௫௪)

பொறிப்பகைதவிர்த்துடல்பொய்யென்றேவினை
யறுத்தநல்லந்தணர்க்காவும்பூமியு
மறிக்கருங்கண்ணுடைமகளிர்வெள்ளமும்
வெறுக்கையும்புனலொடுவெறுக்கநல்கியே. (௫௫)

நகநுதிக்கூற்றினுனண்ணலாருயிர்த்
தொகைவிறற்கூற்றினுக்கருத்திச்சூறைபோன்
றுகமுடித்திடவெழுமூதையூதுகைப்
புகர்முகத்தழல்விழிப்பொருப்பொன்றேறினன். (௫௬)

தாமரை யுலவிடத்தாளவெண்குடை
மிசைநிலவிடவியங்கள்விம்மிட
மாமுரசியம்பிடவளைகலித்திட்க்
கோமறுகிடையுலாக்குறுகன்மேயினன். (௫௭)

வீதிவாய்மன்னவன்வேழமீமிசை
போதுலாக்கருதியேயிருந்தபூங்குழல்
மாதரார்பொம்மெனவந்துமொய்த்தனர்
சீதநீர்வேட்டமானன்னசிந்தையார். (௫௮)

நஞ்செனும்விழியினிலுலத்தக.........
பஞ்சணிபதத்தினிற்சாந்தம்பான்மதிப்
பிஞ்செனுநுதலிலஞ்சனமும்பெய்வளை
வஞ்சியர்வல்லையின்வனையுற்றெய்தினர். (௫௯)

சேலையுங்காஞ்சியுஞ்செறிந்தகூந்தலும்
ஓலையுங்குழையுமின்னொளிசெய்யாரமும்
பாலையும்வென்றசொற்பவளவாய்ச்சியர்
மாலையுந்தாங்கியேமறுகுற்றார்சிலர். (௬0)

ஓர்விழிக்கஞ்சனமெழுதியோர்விழிக்
கேர்பெறத்திருத்துமுனீண்டினர்சிலர்
வார்முலைக்கெழுதியவல்லியோர்முலைச்
சீர்பெறத்திருத்துமுன்செல்கின்றார்பலர். (௬௧)

முருகவிழ்தாமரைமுதல்வனெண்கணாற்
பரிவுறநோக்கியேபழுதறச்செயத்
திருவுருப்பெற்றவிச்செம்மல்பேரெழி
லிருவிழிக்கடங்குமோவென்கின்றார்பலர். (௬௨)

முன்னிவனந்தணன்முளரிக்கண்ணனை
யின்னெழில்மிக்கதொ......னறவளுகனென
மன்னினனென்பதுமறைவலோர்கள்தாம்
பன்னினரென்னவேபகர்கின்றார்பலர். (௬௩)

தெள்ளமுதொடுவருந்தேவர்நாட்டினி
லுள்ளவர்தாமுறுமுருப்பசிப்பெயர்க்
கள்ளவிழ்கூந்தலுங்காமுற்றாளெனில்
விள்ளுவதேயிவனழகைமேலென்பார். (௬௪)

வண்ணமார்சந்தன்வல்லிசூழ்முலைக்
கண்ணெலாம்பொன்னெனக்காமுற்றார்சிலர்

எண்ணமுங்கலையும்வேறேகவேகியே
சுண்ணமும்வளைகளுந்தூவுவார்சிலர். (சுரு)

வனைதருதாமநீண்மருமநோக்கியே
யினைவருநெஞ்சொடுமேமுற்றுரர்சிலர்
சினமதன்சிலையினைச்செயித்தவேந்தன்பேர்
புனைதருவில்லினுற்பொருகின்றுரர்சிலர்.? (சுசு)

மருப்பொசித்திடவளிமலர்ந்தகூந்தன்மா
மருப்பொசித்திடுமூலமாதர்வாயினு
லுருப்பசிக்குதவுதேனுள்ளத்தூறுமா
லுருப்பசிக்குதவெனவுரைக்கின்றுரர்சிலர். (சுஎ)

காய்சினக்காமனைக்கவலைதீர்த்தவா
காய்சினக்காமனைக்கவலைதீரென்பார்
கேசியையெதிர்ந்தவாட்கிழவவென்மலர்க்
கேசியையெதிரெனக்கிளக்கின்றுரர்பலர். (சுஅ)

இரவியைமதியொடுந்தொடர்ந்தவேந்தலே
யிரவியைமதியொடுமென்செய்வோமென்பார்
அருகுறுகொடியணங்காக்குமையனே
யருகுறுகொடியணங்காக்கினுயென்பார். (சுக)

தென்மலைத்தென்றலைத்தீக்கொழுந்தென்பார்
நன்மணித்திரையொலிநமன்முழக்கென்பார்
இன்னிசைவேயினையீருநஞ்சென்பார்
அன்னைமார்வசைக்கினியாற்றலேமென்பார். (எ0)

செக்கர்மேல்வரிலுளஞ்செருக்குமேயென்பார்
தொக்கபேரிருள்வரிற்றுணையிங்கேதென்பார்
வைக்குமோவுயிரெனவன்றில்வாயென்பார்
பக்கமுண்டோகுயிற்பாவிக்கின்றென்பார். (எக)

தாமணிதரளமுந்தண்ணன்சாந்தமும்
பூமணியமளியும்பொரியுமேயென்பார்
சேமணிதென்றிசைத்தேவனூர்தியின்
மாமணியேயெனவருமந்தோவென்பார் (எஉ)

இவ்வகையேழையரெவருமேமுறக்
கைவளர்கன்னலான்களிப்புக்கைம்மிக
வெவ்வயில்வேந்தர்கோன்வீதிபோந்துபோந்
தவ்வயின்மண்டபமணுகினனரோ. (எங)

பள்ளநீருலகெலாம்படைத்தகம்மிய
னுள்ளமுமடங்கிடவுஞற்றுமண்டப
மள்ளிலைப்பூணினானனுசியோடும்போய்த்
தள்ளருமணவினைத்தவிசினேறினான். (௭௪)

வேறு.

எந்துமதிவெண்குடைநிழற்றவேண்ணேழ்தேயத்திறையவர்தோள்
வாய்ந்தமதிதன்றிருமருமான்மணப்பூந்தவிசினிடைவைகச்
சேந்தமதிவாணுதற்கருங்கட்சிறுநான்மருங்குற்பருவமுலைக்
காந்திமதியைத்தருதிரொ[illegible]க்கதிர்வேல்விழிக்கன்னியரெழுந்தார். (௭௫)

வேறு.

எழுந்தமங்கையரேந்தெழில்வாய்[illegible]ங்
கொழுந்தையீன்றகுலக்கொடிக்கோதலுந்
தழைந்தபேரெழிற்றாமரைப்பூவையும்
விழைந்தபின்னினைமெல்லக்கொணர்கின்றார். (௭௬)

வேறு.

காமனுயிராமிரதியுங்கமலமாதும்
பூமகளும்வானவர்புலக்கொடிகடாமு
நாமழகின்மேன்மையெனினாணமிலராமென்
றேழுறவிசும்பிலமுதின்றெனவெழுந்தாள். (௭௭)

நானமூநறுங்கலவையுங்கமழுநாவி
யேனையவும்யோசனையெழுந்துமணம்வீச
மேனிதிமிரும்பொடியுமென்குழலுமாலைத்
தேனினமுமண்ணுலகுபொன்னுலகுசெய்ய. (௭௮)

எண்ணரியசெங்கதிரிளங்கதிர்களென்னப்
பண்ணியகலன்களின்மணிச்சுடர்பரப்ப
நண்ணரியகற்புடையநங்கையெழில்காண்போர்
கண்ணிணைகளைக்கவரமெய்யுயிர்கவற்ற. (௭௯)

அணிச்சமொடனச்சிறைபரப்பியதினம்பொற்
பணிப்பதமலர்த்துணைபதைப்புறமிதித்தே
தனித்திருவினுக்கொருதுணைத்தலைவிவந்தா
ளெனப்பரிபுரத்தரியியம்பிடநடந்தாள். (௮௦)

பணைத்தமுலைநெய்த்தகுழற்பஞ்சியடியஞ்சொற்
றுணர்த்தகொடியென்னவளர்தோகையர்கள்சூழ்போந்
திணைத்தகமலக்கையினணங்கினையெடுத்தே
மணத்தவிசின்மீமிசைவதிந்திடவிதித்தார். (௮௧)

### வேறு.

சிங்கலிலருந்தவந்திருத்தினோர்வயி
னங்கதன்பயன்றிரண்டடைந்ததாமென
மங்கையைமன்னவன்மருங்கின்வைத்தனர்
புங்கவர்மறைநெறிச்சடங்குபோக்கியே. (அ௨)

மறையவராசியுமங்கலப்பெரும்
பறைமுதலியங்களும்பலாண்டும்பண்களு
நறைமலரளிமுரனரலையுங்குளி
ருறைபடுமுகிலினின்றொலித்துவிம்மவே. (அ௩)

தாதுறுபங்கயந்தளிருற்ருலென
மாதுகைபுரூரவாமலர்க்கைசேர்த்தியே
நீதியிற்பெரி[illegible]ருநீரினல்கினான்
ஏதமில்திரிகத்தம்புரக்குமேந்தலே. (அ௪)

அந்தணர்க்கரும்பொருளாதியாகவே
வந்தனைநீரொடும்வீழாதுநல்கியே
சிந்துரத்திருநுதற்றிருவன்னாளெழிற்
சுந்தரப்பைந்தளிர்த்தொடிக்கைபற்றினான். (அ

எரியினைவணங்கிமற்றிறைவர்தாடொழு
தரியபொன்னம்மிமீதம்பொற்பாதம்வைத்
துரியவன்கொழுநனென்றுன்னுவோர்க்கெலாந்
தரணிபோல்விளங்கருந்ததியைக்காட்டினார். (அ௬)

பின்னருமுடிப்பனமுடித்துப்போழல்
தன்னைமும்முறைவலஞ்சூழ்ந்துசங்கொடு
மின்னியங்காகளம்பேரியேங்கவே
பொன்னகர்பொருமணிக்கோயில்புக்கனன். (அ௭)

மணத்திறங்கண்டவவ்வானவேந்தர்க
ளிணர்த்தருநிழன்முதலிடங்கள்துன்னினார்
பணத்தபாந்தட்பாம்பரிக்குமன்னருந்
தணத்ததம்மிடந்தொறுஞ்சார்புற்றாரரோ. (அ௮)

வட்டமண்டலந்தனிபுரக்குமன்னரு
மெட்டரும்மருமினிதுபோயபின்
நெட்டிலைக்கதிர்நுதிநிணங்கொள்வேலினா
னுட்டருமின்பமீதூரவைகினான். (அ௯)

காந்திமதி கலியாணப்படலம் முற்றிற்று.

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்,